ஸ்ரீமத்

# கௌதம புத்தர்

வி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி. ஏ.

இயற்றியது

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090

"சுதேசமித்திரன்" ஆபீஸ்
சென்னை

1920

[Copy Right]

## ஒரு முறை

செவிக்கினிய நாவல்க
ளும், விநோத விசித்தி
ரங்களும், சுவை ததும்
பப் பொதிந்து கிடக்
கும் கதாரத்னகாம்
என்னும் மாதாந்தர
சஞ்சிகையை ஒரு
முறை பார்த்தால் உங்
களை படிக்கச்செய்யும்.
மாதிரி காப்பி விலை
அணா 4. வி. பி. யில்
அணா. 6.

வருட சந்தா ரூ. 2.

மானேஜர்
சுதேசமித்திரன் ஆபீஸ்
மதராஸ்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS

# ஸ்ரீமத் கௌதமபுத்தர்.

ஹிமாலயமலைச்சாரலில் நேபாள தேசத்தில் கபில வாஸ்துவென்னும் புண்ய க்ஷேத்ரமுண்டு. அதில் இக்ஷ்வாகு வம்ச பரம்பரையில் வந்த சுத்தோதனனென்ற சாக்ய குலத்தரசன் ராஜ்ய பாலனஞ் செய்துகொண்டிருந்தான். அவன் தன் பிரஜைகளாலும், இதர தேசத்து ஜனங்களாலும் நன்கு மதிக்கப்பட்டு, ஐசுவரியத்திலும் கீர்த்தியிலும் நிகரற்றவனாய் விளங்கினான். அவனுடைய பட்டமஹிஷியான மாயாதேவி, அழகிலும் மனத்தூய்மையிலும், ஜீவகாருண்யத்திலும் பரோபகாரத்திலும் தனக்குத் தானே ஸமமாய் லோகமாதாவென்று எல்லோராலும் பூஜிக்கப் பட்டவள்.

இந்த மந்வந்தரத்தின் ஆரம்பத்தில் பகவான் ஸூரிய மூர்த்திக்கு உபதேசித்த கர்ம ஞான பக்தி ரூபமான ப்ரஹ்ம வித்தையை ஸூர்ய புத்ரனை வைவஸ்வதமனுவும் அவருடைய புத்ரனை இக்ஷ்வாகுவும் பரம்பராக்ரமமாய் லோகத்தில் உபதேசித்து வந்தார்கள். அது ஜீவன்

களின் சக்திக் குறைவாலும் யுகதர்மத்தாலும் மலினமடைந்து, முடிவில் முற்றிலும் ஸ்வரூபம் மாறிவிட்டது. இப்படித் தர்மம் குலைந்து அதர்மம் மேலிடும் பொழுது, பகவான் தனக்கு நித்ய கைங்கர்யம் செய்யும் முக்தர்களை லோகத்திற்கு அனுப்பித் தானும் அவர்களின் மூலமாய் அம்சாவதாரஞ் செய்து, ஸாதுக்களை ரக்ஷித்து, துஷ்டர்களை நாசஞ்செய்து, ஸநாதன தர்மத்தை நிலைநிறுத்தி வருகிறார்.

அவ்விதமான ஸமயம் வந்ததைக் கவனித்தும் மஹாவிஷ்ணு தன் தசாவதாரங்களில் மத்ஸ்ய கூர்ம வராஹ நரஸிம்ஹ வாமன பரசுராம ராம கிருஷ்ண ரூபியாய் லோகானுக்ரஹம் செய்து, இப்பொழுது சுத்தோதன மஹாராஜாவுக்கும் மாயாதேவிக்கும் பிறக்கும் புத்ரனிடத்தில் தன் அம்சத்தை வைத்து அவதாரஞ் செய்ய எண்ணினார். அப்படியே மாயாதேவி கர்ப்பந்தரித்து, கலியுகம் 2461(BC 640) வைசாக பௌர்ணமியில், கபிலவாஸ்துவிற்கும் தேவதாஹமென்ற விடத்திற்கும் நடுவில் லும்பினி தோட்டத்தில், ஸர்வ லோக குருவாய் விளங்கும் ஓர் மஹா புருஷனைப் பெற்றாள். அவருக்கு ஸித்தார்த்தரென்று பெயரிட்டார்கள். கௌதமரென்று அவருடைய குலப்பெயர். சாக்ய

ரென்பது ஜாதிப்பெயர். புத்தரென்பது அவருடைய ஞான பதவியைக் குறிக்கும் பெயர். ஆகையால் அவருக்கு ஸித்தார்த்தரென்றும் கௌதம முனியென்றும் கௌதம புத்தரென்றும் சாக்ய முனியென்றும் பெயருண்டு. அவர் பிறந்த ஸ்தலமான கபில வாஸ்து, காசி க்ஷேத்ரத்திற்கு வட கிழக்கில் நூறு மைல் தூரத்திலும் ஹிமாலய மலைக்கு 40 மைல் கிழக்கிலுமிருந்தது. (அதற்கருகில் தற்காலத்தில் கோறணை எனப்படும் ரோஹிணி நதி ஓடிக்கொண்டிருந்தது. இப்பொழுது அந்நகரம் பாழடைந்து விட்டது.) அப்பொழுது அஸிதரென்ற ஓர் மஹாரிஷி அந்தக் குழந்தையைத் தர்சனஞ் செய்யவந்து, அவரைப் பக்தியுடன் பூஜித்து, ஸகல லோகங்களுக்கும் அவரால் கிடைக்கப்போகிற பரம லாபத்தை எடுத்துச் சொல்லி, (தன் உத்தேசத்தை நிறைவேற்றினவன் என்று அர்த்தமுள்ள) ஸித்தார்த்தனென்று நாமமிட்டார்.

அவர் பிறந்த எட்டாவது தினத்தில் மாயாதேவி உத்தம லோகங்களை யடைந்தாள். ஜ்யோதிஷ நிபுணர்கள் குழந்தையின் ஜனன காலத்தைப் பார்த்து, அவன் சக்ரவர்த்தியாயாவது ஸர்வ லோக குருவாயாவது

விளங்குவாரென்று சொன்னார்கள். அவருடைய பெரியதாயான மஹா ப்ரஜாபதி யென்பவள் அவரை வளர்த்து வந்தாள். அவர் அதிபால்யத்திலேயே ஸகல வேத சாஸ்திர இதிஹாஸ புராண காவ்ய நாடகாலங்காரங்களையும் வித்யைகளையும் கலைகளையும் கற்றுணர்ந்து, அழகிலும் தேஹபலத்திலும் ஆயுதப் பயிற்சியிலும் யுத்த தந்திரத்திலும் ராஜ்ய நிர்வாஹத்திலும் சிறந்தவராயிருந்தார்.

அவருக்கு 16 வயஸான பொழுது, கோலி தேசத்தரசனும் பூர்வ பந்துவுமான ஸுப்ரபுத்தனென்ற ராஜாவின் புத்ரியான யசோதராவென்று பெயர் வாய்ந்த ராஜகன்யகையை அவர் மணம்புரிந்தார். அவருடைய பிதா, அவர் இல்வாழ்க்கையை வெறுத்துத் துறவறம் பூண்டுவிடுவாரென்று பயந்து, ஸகல ஸௌக்யங்களும் போக போக்யங்களும் நிறைந்த அரண்மனையில் அவரை வைத்து, வியாதி கவலை துக்கமென்ற வார்த்தைகூட அவருடைய காதில் விழாமற் செய்து, லோகத்தில் கெடுதியும் துக்கமும் உண்டென்ற விஷயமே அவருக்கு எட்டாமல் தடுத்துவிட்டார்.

ஆயினும் ஸித்தார்த்தருடைய மனதில் ஏதோ சொல்லமுடியாத ஓர் கலக்க முண்

MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHAIYAR LIB
THIRUVANMIYUR

டாய் ஒரு நாள் நகரத்தைச் சுற்றிப் பார்ப்ப தற்காகப் புறப்பட்டார். அதை அறிந்து அவருடைய பிதா அவர் போகும் வழிகளை தேவேந்திர லோகம்போல் அலங்கரித்து, நோயாளிகள் வயஸ் முதிர்ந்தவர்கள் ஏழைகள் கவலை கொண்டவர்கள் யாரும் எந்தப் பிராணியும் அவருடைய கண்ணில் படக்கூடாதென்று கண் டிப்பாய் உத்திரவு செய்தார். அப்பொழுது லோகத்தில் பரவியிருக்கும் அக்ஞானமும் அதின் காரியமான துக்கமும் முற்றிலும் ஒழியும் பொருட்டுப், பகவான் எப்பொழுது அவதாரஞ் செய்வாரோவென்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேவர்கள், அது நல்ல சமய மென்று யோசித்து, அவர் போகும் வழியில் ஓரிடத்தில் மிகவும் வயஸ் சென்ற ஓர் மனிதனைப்போல் ஓர் ரூபத்தைக் காட்டினார்கள். ராஜ குமாரன் அதுவரையிலும் தான் பார்த் திராத அம்மனிதனைக் கண்டு, தன் ஸாரதியான சன்னனைப் பார்த்து "இது யார்? மனிதனா? அப் படியானால், இவனுடைய தலை மயிர் வெண்மை யாயிருக்கிறதே! கண்கள் பஞ்சடைந்து ஒளி மழுங்கிப் பிரகாசமற்றிருக்கின்றனவே! தோல் சுருங்கி எலும்புகள் தெரியும்படியாய்த் தொங்கு கின்றதே. உடம்பு வில்லைப்போல் வளைந்து

இளைத்து அழுக்கடைந்து தலையும் கையும் காலும் எப்பொழுதும் நடுங்கிக்கொண்டிருக்கின்றனவே! பற்களைக் காணோம். முகத்தில் துக்கமும் வருத்தமும் உபத்ரவமும் குடிகொண்டிருக்கின்றனவே இது என்ன பிராணி" யென்றார். ஸாரதி அதைக் கேட்டுப் பதில் சொல்லத்தயங்கி "ஸ்வாமி! இவையெல்லாம் கிழவயதின் அடையாளங்கள். இவன் ஆதியில் அழகான குழந்தையாயிருந்து, பிறகு பலமும் வீர்யமும் புத்திக் கூர்மையும்பொருந்த யௌவன புருஷனாய் விளங்கி வயஸ் அதிகமாய்த் தேகம் தளர்ந்து அழகும் பலமும் குலைந்து இப்படி அலங்கோலமாயிருக்கிறான். இவனும் நம்மைப் போன்ற மனுஷ்யனேன்"யென்றான். அதைக் கேட்ட ராஜகுமாரனுடைய ஹிருதயத்தில் கருணையும் துக்கமும் ஈட்டியைப் போல் ஊடுருவின. கண்ணீர் பெருக "ஐயோ! இப்படித்துர்க்கதியை அடைவதை ஒருவரும் தடுக்கமுடியாதென்று தெரிந்திருந்தும், லோக வாழ்க்கையில் ஸுகமும் ஆனந்தமும் திருப்தியும் எப்படி மனுஷ்யர்களுக் குண்டாகு"மென்றார்.

அங்கிருந்து கொஞ்ச தூரம் போய்க்கொண்டிருக்கையில், தேவதைகளின் தந்திரத்தால் ஓர்

நோயாளி சாலையோரத்தில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் தேகமெங்கும் புண்களால் நிறைந்து ரத்தமும் சீழும் வடிந்துகொண்டிருந்தது; அதிலிருந்து நாற்றம் வெகு தூரம் அடித்தது; அங்கங்கள் விகாரமாய் வளைந்து நடுங்கிக்கொண்டிருந்தன; மூச்சுத்திணறிக்கொண்டும் உபத்ரவத்தை ஸஹிக்கமுடியாமல் பரிதாபமாய்க் கூவிக்கொண்டுமிருந்தான். ராஜபுத்ரன் ஸாரதியை நோக்கி "இதுவுமென்ன? மனுஷ்ய வகுப்பைச் சேர்ந்த பிராணியோ" வென்றார். சன்ன "மஹாராஜ! இவன் நம்மைப் போன்ற மனுஷ்யனே. தேஹ காந்தியும் அழகும் பலமும் வீர்யமும் பூர்ணமாய் விளங்கித் தனக்கு நிகரில்லையென்று நம்பியிருந்தவன். ஆனால் வியாதியால் பீடிக்கப்பட்டுத், தேஹத்திலுள்ள தாதுக்கள் தடுமாறி சீர்கெட்டு, இப்படி அவனைக்குலைத்துவிட்டன. ஸ்திரீ புருஷர்களும் பண்டித பாமரர்களும் சக்ரவர்த்தியும் ஏழையும் எல்லாப் பிராணிகளும் இப்படி பரிதாபமுள்ள நிலைமையை அடைவது ஸஹஜமே" யென்றான். ஸித்தார்த்தருடைய மனதில் இந்த வார்த்தைகள் பழுக்கக் காய்ச்சி ஊற்றின ஈயத்தைப் போல துளைத்தன. லோகமெங்கும் ஒரே துக்கரூபமாய்த் தோன்றிற்று.

அது வரையில் ஸுகத்தைக் கொடுத்து வந்த
விஷயங்களெல்லாம் ஸ்வப்னம்போல் காணப்
பட்டன.

அங்கிருந்து அதிவேகமாய் ரதம் சென்று
கொண்டிருக்கையில், அவர்களுக்கெதிரில் நான்கு
மனிதர்கள் ஓர் சவத்தைச் சுமந்துகொண்டு
வந்தார்கள். அதைக் கண்டு ஸித்தார்த்தர்
நடுங்கி ஸாரதியை அழைத்து, "அதோ அந்த
மனிதன் ஏன் அசைவற்றுப் பேசாமல் கண்ணை
மூடிக்கொண்டு படுத்திருக்கிறான்? அவனை மற்ற
வர்கள் ஏன் தூக்கிக்கொண்டு போகிறார்கள்?
அவனுக்கு மாலைகளும் மற்ற அலங்காரங்களும்
போடப்பட்டிருப்பதேன்? அவனைச் சுமக்கிறவர்
களும் பின் தொடர்கிறவர்களும் கண்ணீர் விட்டுப்
பெருமூச்செறிந்து தலையிலும் மார்பிலும் அடித்
துக்கொண்டு ஏன் புலம்புகிறார்க"ளென்றார்.
ஸாரதி "இவனுடைய தேகத்திலிருந்து உயிர்
போய்விட்டது. செய்கையும் வார்த்தையும்
ஒன்றும் ஓய்ந்துவிட்டன. இந்த ப்ரே
தத்தை இவனுடைய பந்துக்களும் மித்ரர்களும்
புதைக்கவோ எரிக்கவோ கொண்டுபோகிறார்
கள். தங்களை விட்டு இவன் போனதற்காக இப்
படித் துக்கப்படுகிறார்களென்றான்". ஸித்

தார்த்தர் பயந்து நடுங்கி "மரணமென்பது இவன் ஒருவனுக்கே வந்ததா? அல்லது உலகத்தில் இன்னும் யாருக்காவது வருமா?" வென்றார். ஸாரதி "மஹாராஜ! இவ்வுலகத்தில் மரணமடையாத பிராணி ஒன்றுமில்லை. பிறந்த ஜந்துக்கள் இறந்தே தீரவேண்டும். அதைத் தப்பினவன் இதுவரையி லாருமில்லை" யென்றான். ஸித்தார்த்தர் வாய் குளற "ஐயோ! மூட ஜனங்களே! உங்களுடைய பயத்தையும் அக்ஞானத்தையும் என்ன சொல்லுவேன்! உங்களுடைய தேஹம் மாளுவதைக் கவனியாமல், அஜாக்ரதையாய் லோக வாழ்க்கையில் மூழ்கிக் களிக்கின்றீர்களே" யென்றார். அங்கிருந்து தன் அரண்மனைக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கையில் ஓர் தோட்டத்தில் நாவல் மரத்தடியில் ஓர் மஹா புருஷன் தேஜோமயமாய் ஸமாதியில் உட்கார்ந்துகொண்டிருக்கக் கண்டு "ஸாரதி! இவர் யாரென்று" கேட்டார். சன்ன, "மஹா ப்ரபு! காஷாயத்தையும் பிக்ஷா பாத்ரத்தையுமே தனமாயுடைய இந்த மஹாத்மா பிக்ஷுகர் ஸந்யாஸி, லோகவாழ்க்கை அநித்யமென்றும் துக்கத்தால் நிறைந்ததென்றும் அக்ஞானமே துக்கத்திற்குக் காரணமென்றும் தியானத்தா லறிந்து, இல்லறம் துறந்து, துறவறம் பூண்டு, துக்க ஸமுத்ரத்தைத்தாண்டி, நித்யானந்

தமென்று பரமபதத்தை யடைந்திருக்கிறேனென்றான். ஸித்தார்த்தர் "துக்க ரூபமான ஸம்ஸாரத்திலிருந்து தப்புவதற்கு வழியுண்டானால், நான் அதைக் கண்டுபிடித்து, நிர்வாணத்தை யடைந்து, ஸகல ஜீவகோடிகளையும் ஜனனமரணப் ப்ரவாகத்திலிருந்து கரை யேற்றக்கூடாது ஏன்? இது வரையில் அக்ஞானத்தால் என்கண்கள் மறைக்கப் பட்டன. இப்பொழுது விழித்துக்கொண்டேன். ஸகல ஸம்ஸார பாசங்களையும் அறுத்து மோக்ஷ மார்க்கத்தைத் தேடியடையும் வரையில் ஓய்வதில்லை. என் முன்னோர்களைப்போல் நானும் புத்தனாவே" னென்று பரமப்ரதிக்ஞையைச் செய்தார்.

பிறகு அவருக்கு லோகவாழ்க்கையிலும் செல்வத்திலும் அதிகாரத்திலும் விஷயஸுகத்திலும் மனம் நாடாமல், ஒவ்வொரு நிமிஷமும் யுகமாய்க் கழிந்தது. அவருடைய 29 வது வயதில் யசோதரா ராஹுலனென்றொரு புத்ரனைப்பெற்றாள். அதைக் கேட்டவுடன் அவர் "இது இன்னு மோர் ஸம்ஸாரபாசம். இதையும் நான் தெறிக்க வேண்டு" மென்றார். அப்பொழுது அவருடைய பந்துவான கிருசகௌதமி யென்ற பெண் அவரிடத்தில் வந்து, "தங்களைப்

பெற்ற பிதா பாக்யசாலி. தங்களை வளர்த்த மாதா பாக்யசாலி. தங்களைப் பர்த்தாவாய் அடைந்த ஸ்திரீ பாக்யசாலி, தங்களைப் பிதாவா யடைந்த புத்ரன் பரம தன்யனென்றாள்'' அவன் சொன்ன நிவிருத்தமென்ற வார்த்தைக்குப் பாலிபாஷையில் பாக்யசாலியென்றும் முக்தனென்றும் இரண்டர்த்தங்களுண்டு. ஸித்தார்த்தர் இரண்டாவது அர்த்தத்தை கிரஹித்துக்கொண்டு நீ சொல்லுவது ஸரி. என் பெற்றோர்களையும் பார்யையையும் புத்ரனையும் முக்தர்களாகச் செய்வதற்கு, நான் முதலில் ஸம்ஸார பந்தத்திலிருந்து முக்தியடைய வேண்டுமென்று நீ ஞாபகப் படுத்தினதற்காக உனக்கு வந்தனஞ் செய்கிறே னென்று தன் கழுத்திலிருந்த முக்தாஹாரத்தை அவளுக்குக் கொடுத்து "இதை குருதக்ஷிணை "யென்றார்.

அன்றிரவில் நடு ஜாமத்தில் எல்லோரும் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருக்கையில் ஸித்தார்த்தர் தன் பார்யையும் புத்ரனும் படுத்திருக்கும் அந்தப்புரத்திற்குப் போய் அவர்களை உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார். தான் எல்லோரையும் விட்டுத் துறவியாய்த் தனியே சென்று மோக்ஷ மார்க்கத்தைத் தேட நிச்சயித்த படியால், தனக்கு அத்யந்தம் பிரியமானவர்களை ஒரு

தடவை பார்த்து விட்டுப் போகவேண்டுமென்றும், அப்பொழுது தன் மனஸ் கலங்குகிறதாவென்று பரீக்ஷிப்பதற்கும் அங்கே வந்தார். "உங்களை விட்டுப் பிரிவது ஸாமான்யமான காரியமல்ல, அதினால் தற்காலத்தில் உங்களுக்கு எல்லையற்ற வருத்தமுண்டாகும். ஆனால் இப்படியே அக்ஞானத்திலும் துக்கத்திலும் காலமுள்ள வரையில் நீங்களும் நானும் ஆழ்ந்து கிடப்பதைக் காட்டிலும், உங்களை விட்டுப் பிரிந்து மோக்ஷ மார்க்கத்தைத் தேடி ஜீவ கோடிகளின் துக்கத்தை நீக்குவேன். நான் அடையும் ஞானத்திலும் ஆனந்தத்திலும் முதலாவது பாகம் உங்களுடையது. உங்களுடைய நித்யமான க்ஷேமத்திற்காகவே உங்களை விட்டுப் போகிறேன்" னென்று வெளியில் வந்து, தன் ஸாரதியுடன் குதிரை மேலேறிக் கொண்டு அரண்மனையை விட்டுப் புறப்பட்டு, அதிவேகமாய்த் தன் ராஜ்யத்தின் எல்லையை நோக்கிச் சென்றார். இப்படி ஸித்தார்த்தர் அதிபால்யத்தில் அகண்டமான ஐசுவரியத்தையும் அதிகாரத்தையும் ராஜ்யத்தையும் போக போக்யங்களையும் நிகரற்ற பார்யையும் புத்ரனையும் மனப்பூர்வமாய் வருத்தமில்லாமல் துறந்து, கடையனுக்கும் கடையனாய், வீடுவீடாய் இரந்துண்பவனாய், வீடுவாசலில்லாமல், அனாதியாய்ப் பரதேசியா

யிருந்து, லோக துக்கத்தைத் தீர்ப்பதற்காகத் தன்னையும் தன் ஸகல சக்திகளையும் தத்தம் செய்தார்.

தன் ராஜ்யத்தைத் தாண்டி, அநோமாவென்ற நதிக்கரைக்கு வந்து, தன் உடுப்புகளையும் ஆபரணங்களையும் ஸாரதியிடத்தில் கொடுத்து, அவனைத் தன் பிதாவிற்கு ஸமாசாரத்தைச் சொல்லும்படி அனுப்பிவிட்டுத், தான் அங்கே கண்ட ஓர் பரதேசியின் உடைகளை வாங்கித் தரித்து, தலைமயிரை எடுத்துவிட்டுக், கால்நடையாய்ப் பிம்பிஸாரனால் ஆளப்பட்ட மகததேசத்தின் ராஜதானியான ராஜ கிருஹத்தை நோக்கிச் சென்றார். அங்கே அவரைப் பார்த்தவர்களெல்லோரும் யாரோ மஹர்ஷி யென்றும் தேவதையென்றும் நினைத்தார்கள். பிம்பிஸாரன் தன் பரிவாரங்களுடன் அவரிடத்தில் வந்து, அவருடைய உறுதியைக் கலைக்க முடியாமல், அவருடைய நிச்சயத்தை யறிந்து மெச்சிக் கைகூப்பி வணங்கித் "தாங்கள் தேடும் பொருள் தங்களுக்குக் கிடைக்கக் கடவது. அப்பொழுது என்னையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு தங்களுடைய சிஷ்யனாகச் செய்துகொள்ளும்படி பிரார்த்திக்கிறே" னென்"றான்.

ஸித்தார்த்தர் அதை அங்கீகரித்து அங்கிருந்து சென்று ஆராதர் உத்ரசர் பார்க்கவ

ரென்ற பிரஸித்தி பெற்ற பிராஹ்மண பண்டிதர் களிடத்தில் சிலகால மிருந்து, அவர்களின் கொள்கைகளைப் பரீக்ஷித்துத், தன் ஸந்தேஹங் கள் தீராமல், தேவாலயங்களில் பூஜை செய்யும் அர்ச்சகர்களைக் கண்டு பேசி அவர்களாலும் தன க்கு ஸமாதானம் ஏற்படாமல், அவர்கள் செய்யும் பிராணி ஹிம்ஸையாலும் க்ரூர க்ருத்யத்தாலும் மனம் நடுங்கி, உருவெலா (அங்கே அது தற்கா லத்தில் புத்தகயா கோவிலுக்கு ஸமீபத்திலுள் ளது) வென்றவிடத்தில் ஸந்யாஸிகளும் யோகிகளு மிருக்கிறார்களென்று கேள்விப்பட்டு அங்கே சென்றார்.

அங்கே கௌண்டின்யர், பத்ரேயர், வியாப்யர், மஹாநாமர், அசுவஜித் தென்ற ஐந்து பிராஹ்மண, கள் கடுந்தபஸ் செய்துகொண்டிருந்தார்கள். ஸித்தார்த்தர் அவர்களுடன் சேர்ந்து, ஆறு வரு ஷங்கள் வரையில் அவர்களைக் காட்டிலும் மிக வும் கடுமையான தபஸையும் கோரமான யோக முறைகளையும் அனுஷ்டித்தார். அதைக் கண்டு அவர்கள் அவருக்குச் சிஷ்யர்களானார்கள். அப் படியும் தன் மனதிலுள்ள துக்கமும் ஸந்தேஹ மும் தீராமல் "வீணாய் என் தேஹத்தை வாட்டி ஒடுக்கிக் கொண்டேன். அன்னபான மில்லாமல்

இது மெலிந்துபோய், என் காரியத்திற்கு உபயோகப்படாமற் போயிற்று. தபஸிலும் போக ஸாதனத்திலும் பயனில்லையென்று கண்டு," அங்கிருந்து எழுந்து போக வெண்ணிச் சக்தியில்லாமல் மூர்ச்சையடைந்தார். அப்பொழுது அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த ஸுஜாதையென்னும் பெண் அவரைக் கண்டு வருந்தி, பாலையும் அன்னத்தையும் கொடுத்தாள். ஸித்தார்த்தர் அதைப் புசித்துக் களைதீர்ந்து, அங்கிருந்து புறப்பட்டுப், போதி விருக்ஷத்தினடியில் வந்தார். (அது தற்காலத்தில் புத்தகயாவில் மஹாபோதி ஆலயத்தில் காணப்படும் அரசமரம்).

அப்பொழுது ஸாயங்காலமாயிற்று. அங்கே கிழக்குமுகமாய் உட்கார்ந்துகொண்டு "நான் ஜனனமரணப் பிரவாஹத்திற்கும் துக்கத்திற்கும் காரணத்தையும் அவைகளை ஒழிப்பதற்கு உபாயத்தையும் கண்டுபிடித்து, பூர்ண ஞானத்தையடைந்து புத்தனாகிறவரையில் இவ்விடத்திலேயே இருப்பேனெ"ன்று பிரதிக்ஞை செய்தார். அவருடைய உறுதியைக் கலைப்பதற்கும் மனதைப் பரீக்ஷிப்பதற்கும் கோரமான ரூபங்களும் பயங்கரமான சப்தங்களும், மனதையும் இந்திரியங்களையும் மயக்கி வசப்

படுத்தும் பல காக்ஷிகளும் உண்டாயின. பதி னான்கு லோகங்களிலுள்ள பூதப்ரேத பிசாச யக்ஷ ராக்ஷஸ அஸுர தைத்ய கணங்களும், இந்தி ராதிப்ரஹ்ம லோகம் வரையிலுள்ள ஐசுவரியங்க ளும் போக போக்யங்களும் ஸித்திகளும் அவரு டைய மனோதைரியத்தை, எள்ளளவேனும் அசைக்க முடியவில்லை. சற்றும் கவர முடிய வில்லை. அலையற்று ஓய்ந்து அசைவற்று அகாதமாயிருக்கும் ஸமுத்ரத்தைப் போல் சாந்த சித்தராய், ஸகல ஜீவராசிகளையும் பரம கருணையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். இப்படி ப்ரபஞ்சத்திலுள்ள ஸகல பந்தங்களாலும் தனக்கு யாதொரு தடையுமில்லையென்று காட்டினவுடன், ஆகாசத்தி லிருந்து புஷ்பமாரி பொழிந்தது. பிரம்மாதி தேவ கணங்கள் "மஹா புருஷ! ஆசையாலும் த்வேஷத்தாலும் கோபத்தாலும் நெருங்க முடியாத காலாக்னியே! நீயே சுத்தன், புத்தன், கருணாமூர்த்தி, உன் உபதேசம் ஸித்தியாகும், பரம தத்வத்தைக் காண்பாய், ஸூர்யன் தன் கிரணங்களைப் போக்குவது போல், ஜனங்களின் மனதில் குடிகொண்டிருக்கும் அக்ஞானத்தை யொழித்து, ஞான ஸூர்யனாய் விளங்குவா யெ"ன்றார்கள்.

பிறகு ஸித்தார்த்தர் ஆழ்ந்த ஸமாதியி
லிருந்து, லோகத்திலுள்ள ஸகல துக்கத்தையும்
பாபங்களையும் அவைகளின் பலன்களையும் ஞான
திருஷ்டியால் பார்த்து "ஹா! மனுஷ்யர்கள்
தங்களுடைய பாபச் செயல்களின் பலன்களை
நான் பார்ப்பதுபோல் பார்க்க முடிந்தால்,
வெறுப்படைந்து பயம் மேலிட்டுத் துன்மார்க்
கத்தை விட்டு ஸன்மார்க்கத்தில் நடப்பார்களே.
ஆனால் அஹங்காரமும் ஆசாபாசங்களும் அவர்
களை மறைக்கின்றன. ஸுகத்தையடைய விரும்
பித் துக்கத்தை விளைவிக்கிறார்கள். தேஹம் அழிந்
தாலும் அந்தத் துக்கம் போவதில்லை. அஹங்
காரமும் ஆசையும் அவர்களை எந்த ஜன்மத்தி
லும் தொடர்கின்றனவே" என்று ஜனன மரண
ப்ரவாஹ ரூபமான ஸம்ஸாரத்தையும் அதின்
காரணங்களையும் காரியங்களையும் பரீக்ஷித்துப்
பார்த்து, ஸகல ஸந்தேஹமும் விபரீதமும் நீங்கி,
ஸம்பூர்ண ஞானத்தையும் சக்தியையும் அனந்த
கல்யாண குணங்களையும் அடைந்து, கர்மபாசங்
களைத் தெறித்துப், பவஸாகரத்தைத் தாண்டி,
நித்யமாயும் நிரதிசயமாயும் நிரவதிகமாயு மிருக்
கும் ஆனந்தத்தை படைந்து, ஸம்யக் ஸம்புத்தராய்
ததாகதராய் விளங்கினார். ஸர்வ ஞானத்தையும்

ஜீவகோடிகளுக்கு உபதேசிப்பதற்காக ஸுலபமாயும் வெகு சுருக்கமாயும் அமைத்து, நான்கு பரம தத்வங்களும் அவைகளை ஸாதிப்பதற்கு அஷ்டாங்க மார்க்கமுமே தர்ம ஸங்கிரஹம், தத்வ ஸங்கிரஹம், மத ஸங்கிரஹமென்று முடிவு செய்தார்.

## நான்கு பரமதத்வங்கள்

1. பிரபஞ்சமெல்லாம் துக்கமயமென்பதே முதலாவது பரமதத்வம். ஜீவன்கள் பிறக்கும் பொழுதும் துக்கமே; வளரும் பொழுதும் துக்கமே; வியாதியும் பசிதாஹமும் மரணமும் துக்கமே; நாம் விரும்பாதவைகளுடன் சேர்ந்திருக்கும்படி நேருவதும் துக்கமே; நாம் விரும்பினவைகளை விட்டுப் பிரியும்படி நேர்வதும் துக்கமே; நாம் விரும்பினவை கிடைக்காமல் சோர்வடைவதும் துக்கமே.

2. துக்கத்தின் காரணத்தைக் கண்டுபிடிப்பதே இரண்டாவது பரமதத்வம். ஆசையே துக்கத்தின் காரணம்; பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களின் சேர்க்கையால் நமக்கு உணர்ச்சி யுண்டாகிறது. அதிலிருந்து ஓர் தாஹம் (திருஷ்ணை) உண்டாகிறது. அது உடனே (தணிக்க) திருப்தி செய்யப்படா விட்டால் துக்க முண்டாகிறது.

நாம் என்னும் பிரமையே யதார்த்தங்களில் பூர்விதமான பற்றுதலுக்குக் காரணமாய் வெளிப்படுகிறது. நமக்கு ஸாதகத்தைக் கொடுக்கக் கூடியவைகளை அனுபவித்துக்கொண்டேயிருக்க வேண்டுமென்ற ஆசையால் துக்கமென்ற வலையில் மாட்டிக்கொள்ளுகிறோம். இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் ஸாதகங்களே நம்மை வலைக்குள் இழுக்கும் மாமைத்தப்போராகும். துக்கமும் வருத்தமுமேயாம்.

3. துக்கநிவிருத்தியே மூன்றாவது பரம தத்வம். நானெனும் தன்மையை அழிப்பவனே ஆசை வலையைத் தெறித்தவன். அவனிடத்தில் துக்கம் உண்டாவதற்குக் காரணம் யாதொன்றுமில்லை. ஆசையென்ற தீபம் எரிவதற்கு வேண்டிய வர்த்தியும் தைலமும் அற்றால் தானே அணைந்துபோம்.

4. துக்கநிவிருத்தியை அடைவதற்கு ஸாதனமான ஆர்ய அஷ்டாங்க மார்க்கமே நான்காவது பரமதத்வம். ஸத்யமென்ற ஸூர்யனுக்கு முன் நானென்ற பனி அழிந்துபோம். நமது கடமையைச் செய்வதிலேயே நோக்கமும் ஆசையும் நாடும். ஞானோதயமானவன் இந்த மார்க்கத்தில் பிரவேசித்து துக்கத்தை வேரறுப்பான்.

அஷ்டாங்க மார்க்கம்:

(1) துக்கத்தையும் அதன் காரணத்தையும் நிவிருத்தியையும் நிவிருத்தி மார்க்கத்தையும் அக்ஞானம் முதல் பரம்பரையாய் வரும் காரண காரிய ஸமூஹத்தையும் பற்றின ஸரியான ஞானம்.

(2) எல்லோரிடத்திலும் கிருபையுள்ளவனாய், எல்லோரிடத்திலும் ப்ரீதியுள்ளவனாய், இந்திரியங்களை ஜயிக்க வேண்டுமென்ற ஸரியான ஆசை.

(3) எல்லோரிடத்திலும் பிரியமாயும் நிஜமாயும் பேசும் ஸரியானவார்த்தை.

(4) ஜீவஹிம்ஸை திருட்டு காமம் முதலியவைகளை விலக்க வேண்டுமென்று சொல்லும் உபதேசங்களை அனுஷ்டிக்கும் ஸரியான நடத்தை.

(5) பிராணிஹிம்ஸை செய்யாமலும், மதுவிரி வஸ்துக்கள் விஷம் முதலியவைகளை விற்காமலும், தனக்கு அவசியமாய் வேண்டிய அளவு பொருளை ஸம்பாதிக்கும் ஸரியான ஜீவனோபாயம்.

(6) பாப கர்மங்களைவிட்டு நற்கருமங்களையே செய்யவேண்டு மென்ற சரியான முயற்சி.

(7) ஸகல உணர்ச்சிகளையும் மனோ ஸங்கல்பங்களையும் விட்டொழித்து நிர்வாணத்தை அடைவதி

லேயே ஒரே முகமாய்ப் பிரக்ஞையை நாட்டும் ஸரியான ஞானம்.

(8) நான்கு ஞானபதவிகளும் தாண்டிப் பூர்ண ப்ரக்ஞையுடன் நிர்வாணத்தை அடைவதற்கு ஸாதனமான ஸரியான ஸமாதி.

நான்கு ஞானபதவிகள்:—

(1) ஸ்ரோதாபத்தி (ஸாதுக்களின் ஸங்கத்தாலும், தர்மோபதேசத்தை சிரவணஞ் செய்வதாலும் காரிய காரணங்களைப்பற்றி மனனஞ் செய்வதாலும், ஸத்யம் சௌக்யமென்ற குணங்களை ஸம்பாதிப்பதாலும், விக்திக்கும் நானென்ற பற்றைவிட்டு ஸந்தேகமற விபரீதமற்றுச் சரியை, கிரியை, பூஜை யாத்ரை முதலிய கர்ம காண்டத்தைத் துறக்க வேண்டும். தன் தேகங்களையும் இந்திரியங்களையும் அந்தக் கரணத்தையும் சுத்தி செய்வதில் எப்பொழுதும் நோக்கமுள்ளவனாயிருக்க வேண்டும். ஜீவஹிம்ஸை செய்யக்கூடாது. நேர்மையையும் உண்மையையும் கைப்பற்ற வேண்டும். மயக்க வஸ்துக்களிலும் காமஸுகங்களிலும் மனதைச் செல்லவிடக்கூடாது.

(2) ஸக்ருதாகாமின் (இந்தப் பதவியை அடைந்தவன் இன்னும் ஒருதடவை பிறக்கவேண்டும். மேற்சொன்ன தோஷங்களை வேரறுத்துக்

கோபம் த்வேஷம் அஸூயை காமம் முதலியவை களில் மனதை ஒரு நாளும் மறுபடியும் செல்ல வொட்டாதபடி வாஸனைகளையும் ஒழிக்க வேண்டும்)

(3) அநாகாமி இவனுக்குப் இனிப்பிறப்பில்லை. மேற்சொன்ன தோஷங்கள் யாவும் அழிந்து, காம க்ரோதங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டவன்.

(4) அர்ஹத் மேற்சொன்ன தோஷங்களும் ரூப அரூப லோகங்களை அடைய வேண்டுமென்ற ஆசையும் பெருமையும் மோஹமும் முற்றிலும் ஒழிந்தவன் ஒன்றையும் விரும்பாதவன். நரை திரை மூப்பு மரணம் அவனை அணுகாது. ரூப அரூப காம லோகங்களையும் தாண்டி மேலான பதவியில் பிரக்ஞையை நாட்டினவன் மனுஷ்ய களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத நிலையிலிருப்பவன்.)

மேற்சொன்ன உபதேசம் யாவும் ஓரே வாக்யத்தில் அடங்கியிருக்கும்:—

**ஸர்வபாபஸ்ய அகரணம்**
**குசலஸ்ய உபஸம்பதா**
**ஸ்வசித்த பர்யோத்யாபனம்**
**ஏதம் புத்தானு சாஸனம்**

"ஸகல பாபச் செயல்களிலிருந்தும் ஒழி. ஸகல நற் கருமங்களையும் செய். உன் மனதைப் பரிசுத்த

மாகச் செய்துகொள். இதே புத்தருடைய உபதேசம்"

இப்படித் தன் ஸந்தேகங்கள் நீங்கித், தன் பிரயத்னங்கள் பலித்து, அக்ஞானத்தையும் துக்கத்தையும் ஜயித்துப், பரிபூர்ண ஞானத்துடனும் ஆனந்தத்துடனும் விளங்கிப், புத்த பகவான் மோக்ஷானந்தத்தை அனுபவித்துக்கொண்டு அவ்விடத்திலேயே நாற்பத்தொன்பது தினங்கள் தங்கியிருந்தார்.

தாபஸன் பாஹ்லிகனென்ற இரண்டு வியாபாரிகள் அவ்வழியாய் வந்து அவரை நமஸ்கரித்து, அவரால் உபதேசிக்கப்பட்டு, அவருக்கு முதலாவது லௌகிக சிஷ்யர்களானார்கள். பிறகு பகவான் "நான் பரம தத்வத்தைப் பூர்ணமாய் அறிந்து விட்டேன்; ஆனாலும் லோகத்திலுள்ளவர்கள் விஷய ஸுகங்களாலும் அஹங்காரத்தாலும் மோஹத்தாலும் இதைக் கிரஹிக்க முடியாதவர்கள். என் உபதேசம் அவர்களுக்குப் பிரயோஜனத்தைக் கொடுக்குமா? நிஜமான ஆனந்தம் அவர்களுக்குத் துக்கமேயாகும். அக்ஞானமும் துக்கமும் அவர்களுக்கு ஞானமும் ஆனந்தமுமேயாகும். நான் இப்படிப்பட்டவர்களுக்குத் தர்மத்தை உபதேசித்தால், அவர்களுக்கும் யாதொரு பிரயோஜ

ணமுமில்லை. எனக்குமவீண்சிரமமேயாகுமே"ன்று சற்றுத் தயங்கினார். பிறகு "ஐயோ! ததாகதர் தர்மத்தை உபதேசிக்காவிட்டால் ஸகல லோகங்களும் அக்ஞானத்தால் நசிக்குமே! ஜீவன்களுக்குள் தெரியாதவர்களும் கொஞ்சம் தெரிந்தவர்களும் ஏறக்குறைய நன்றாய்த் தெரிந்தவர்களும் பல வகையுண்டு. அவர்களில் பெரும்பாலார் கேட்காவிட்டாலும், சிலராவது கேட்டுத் தர்மத்தை யனுஷ்டித்து நற்கதியடைவார்கள். அவர்களின் மூலமாய்ப் பரம்பரையாய் இன்னும் அநேகர் முக்தியடைவார்கள்; ஆகையால் ஞானமும் மோக்ஷமும் அடையப்படும் மார்க்கத்தை விஸ்தாரமாய்த் திறந்து விட்டேன். விருப்பமுள்ளவர்கள் தாராளமாய்ப் பிரவேசிக்கலாம். அக்ஞானத்தையும் துக்கத்தையும் ஒழித்துப் பூர்ணஞானத்தையும்ஆனந்தத்தையும் அடையலாமே"ன்று நிச்சயித்தார்.

முதலில் உருவேல ஆரண்யத்தில் தன்னுடன் கடுந் தபஸ்செய்துகொண்டிருந்த ஐந்து ஸந்யாஸிகளைத் தேடிப்போய்க் காசி க்ஷேத்ரத்தில் அவர்களைக் கண்டுபிடித்தார். முதலில் அவர்கள் இவரை லக்ஷியஞ்செய்யவில்லை. ஆயினும் பகவானுடைய உபதேசத்தைக் கேட்டுத், தங்களுடைய மனதிலிருந்த ஸந்தேஹங்கள் நீங்கித் துக்கம் தீர்

ந்து, புத்தபகவானைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது பகவான் அங்கே செய்த தர்மோபந்யாஸத்திற்குத் தர்ம சக்ரப்ரவர்த்தனமென்று பெயர். (தர்மமென்ற மஹாரதத்தின் சக்ரத்தை ஓட்ட ஆரம்பித்தது.) அந்த ஐந்து ப்ராஹ்மணர்களும் புத்த பகவானால் ஸந்யாஸம் பெற்று பிக்ஷுக்களானார்கள். அவர்களில் கௌண்டின்யர் அதிஸூக்ஷ்மபுத்தியுடன் தர்மத்தைக் க்ரஹித்து அதிதீவிரமாய் அநுஷ்டித்தார். அவர்கள் ஸந்யாஸத்தைப் பெறும்பொழுது திரிசரணமென்ற வாக்யங்களை உச்சரித்தார்கள்.

(1) புத்தரைச் சரணமாயடைகிறேன். ஸர்வோத்தமர், பரிபூர்ணஸ்வரூபி, ஞானத்தையும் பக்தியையும் மோக்ஷமார்க்கத்தையும் நமக்கு உபதேசித்தவர், ஸகல லோகங்களுக்கும் குரு.

(2) லோகோத்தரமான தர்மத்தைச் சரணமடைகிறேன். அது கால தேசங்களுக்கு அதீதமானது. ஒருவரால் உபதேசிக்கப்பட்டதென்றே அதை நம்பவேண்டியதில்லை. ஒரு க்ரந்தத்தில் எழுதியிருக்கிறதென்றே அதை நம்பவேண்டியதில்லை. வெகுகாலமாய்ப் பலரால் அநுஷ்டிக்கப்படுகிறதென்றே அதை நம்பவேண்டியதில்லை. அவ்விஷயத்தில் நம்பிக்கை அவசியமில்லை. நாமே

நேரில் கேட்டு மனனஞ்செய்து பலவிதமாய்ப் பரீக்ஷித்து, நமது ஸந்தேஹ விபரீதங்கள் நீங்கிப் புத்தி பூர்வமாய் ஒப்புக்கொண்டப்பார தத்வமேயாயும் (3) ஸங்கத்தைச் சரணமாக அடைகிறேன். தர்ம மார்க்கத்தில் நடக்கும்படிக்கும் ஸ்வகாருண்யத்தையும் தியாகத்தையும் ஸத்யத்தையும் அனுஷ்டிக்கும்படிக்கும் நமக்குப் புத்த பகவானுடைய சிஷ்யர்கள் உபதேசிக்கிறார்கள். அவர்களும் அனுஷ்டித்துக் காட்டுகிறார்கள். அதினால் கிடைக்கக் கூடிய உத்தமமான பதவிகளை அடைந்து நமக்குத் தீபம்போல் பிரகாசிக்கிறார்கள்.

பிறகு காசியிலுள்ள ஓர் தனிகனை வர்த்தகனுடைய புத்ரன் யசஸ் என்பவனும் அவனுடைய பிதாவும் தாயும் பார்யையும் பகவானுடைய உபதேசத்தைக் கேட்டுச் சிஷ்யரானார்கள். யசஸின் தாயும் பார்யையுமே முதலாவது லௌகிக பிக்ஷுணிகள். இப்படி மூன்று மாஸங்களுக்குள் அறுபது பிக்ஷுக்கள் அவரைச் சிஷ்யர்களாயடைந்தார்கள். அவர்களையழைத்துப் பகவான் "பிக்ஷுக்களே! நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் யாத்ரை செய்து, தர்மத்தை எல்லோருக்கும் ஆண் பெண், ஏழை தனவான், பண்டிதன் பாமரனென்ற பேதமின்றி, ஜாதிபேதமின்றி, எல்லோ

ருக்கும் உபதேசியுங்கள். மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் உங்களால் க்ஷேமமுண்டாகட்டும். ஜீவகோடிகளிடத்தில் பரம கருணை புரிந்து, கோபம் த்வேஷம் அஸூயை அக்ஞானம் காமம் முதலிய தோஷங்களிலிருந்து அவர்களை ரக்ஷியுங்கள். ஒவ்வொருவரும் தான் நற்கதியடைவதையே முக்யமாய்க் கொள்ளக்கூடாது. மண்ணிறந்த ஜீவகோடிகள் அக்ஞானத்தாலும் துக்கத்தாலும் அழுவதைப் பார்த்துக் கொண்டு, தான் ஒருவனே ஆனந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைப்பவனைப் போல் மஹாபாபியுமில்லை. ஆகையால் உங்களுடைய தேஹம் பிராணன் பொருள் புத்தி யுக்தி ஸித்திகள் ஞானம் முதலிய யாவும் பரோபகாரத்திற்கும் பிறரை நற்கதியடையச் செய்வதற்குமே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று நிச்சயமாய் அறியுங்கள். இதையே ஒவ்வொருவருக்கும் உபதேசியுங்கள்” என்று அவர்களை அனுப்பினார்.

முதலில் அவரைச் சிஷ்யர்களாயடைந்த ஐந்து பிக்ஷுக்களே ஸங்கத்திற்கு ஆதி புருஷர்கள். அக்காலத்தில் பகவான் அவர்களைப் பார்த்துத் தர்மமார்க்கத்தில் நடக்க முயலுகிறவன் தனியேயிருந்தால், எப்பொழுதாவது மனந்தளர்ந்து கவ

ணங்குறைந்து அம்மார்க்கத்திலிருந்து நழுவும்படி நேரும். ஆகையால் நீங்கள் ஒன்று சேர்ந்து ஒரு வர்க்கொருவர் உதவி செய்துகொண்டு, தைரியப் படுத்திக் கொண்டு, விடா முயற்சியுடன் தர்மத் தை அனுஸரிக்க வேண்டும். உடன் பிறந்தார்க ளைப்போல் ப்ரீதியிலும பரிசுத்தத்திலும் ஸத்யத் திலும் நிகரற்றவர்களாயிருங்கள். ஸகல ப்ராணிக ளும் தர்ம ராஜ்யத்தில் பிரஜைகளாயிருக்கும்படி லோகமெங்கும் சுற்றித் திரிந்து தர்மோபதேசஞ் செய்யுங்கள். இதே பிக்ஷுக்களின் கூட்டம், தர் மத்தின் ஸங்கம், ததாகதரைச் சரணமடைந்து தர் மத்தை அனுஷ்டிப்பவர்கள் எல்லாரும் இதைச் சேர்ந்தவர்க'' ளென்று ஸங்கத்தை ஸ்தாபித்தார்.

அப்படியே பிக்ஷுக்கள் லோகமெங்கும் யாத் திரை செய்து, ஓரிடத்திலும் விசேஷமாய்த் தங்கா மல், வருஷா காலங்களில் மாத்திரம் பகவானிருக் குமிடத்திற்கு வந்து, அவருடைய ஸதுபதேச த்தை கேட்டுக்கொண்டிருப்பார்கள். உருபில்வ மென்ற ஸ்தலத்தில் கிருஷ்ண பக்தர்களும் அக் னிஹோத்ரிகளுமான ஜடிலர்களென்ற பிராஹ்மண ர்களுக்குத் தலைவரான மஹாகாசியபர் நதிகாசியபர் கயாகாசியபரென்ற மூன்று ஸஹோதரர்கள்வெகு செல்வாக்கும் ஐசுவரியமும் அதிகாரமும் பொருந்

தினவர்கள். புத்தபகவானுடைய அதிமானுஷ்ய சக்தியாலும் ஞானத்தாலும் மஹாகாசிபருடைய கர்வமும் அஹங்காரமும் ஒழிந்து. அவர் தன்சிஷ்யர்களான ஜடிலர்களுடன் புத்தரைச் சரணமடைந்தார். அதைக் கண்டு அவருடைய ஸஹோதரர்களும் புத்தரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர்கள் செய்து வந்த வெளிப்படையான அக்னிபூஜையின் ஸ்வரூபத்தைப்பற்றிப் பகவான் ஓர் உபந்யாஸம் செய்தார். "ஜடிலர்களே! பிரபஞ்சத்தில் எல்லாம் எரிந்துகொண்டிருக்கின்றன. நேத்ரம் முதலிய இந்திரியங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. நமது எண்ணங்கள் எரிந்துகொண்டே யிருக்கின்றன. காமமென்ற தீ எல்லோரையும் சாம்பலாக எரிக்கிறது. இதுவும் போதாமல் கோபம் அக்ஞானம் த்வேஷம் முதலிய எரியக்கூடிய வஸ்துக்கள் எண்ணிறந்தவை. எரிப்பதற்குக் கட்டைகள் இருக்கும் வரையில் தீ அணையாது. பிறப்பும் இறப்பும் மூப்பும் சாக்காடும் துக்கமும் அழுகையும் கஷ்டமும் மனத்தளர்ச்சியும் மோஹமும் நம்மை விட்டு நீங்காது. இவைகளை நன்றாய் ஆழ்ந்து யோசிக்கும் சிஷ்யன் ஸத்யத்தை யடைய விரும்பி, நான்கு பரமதத்வங்களை யறிந்து, அவைகளை ஸாதிக்கும் ஆர்ய அஷ்டா

ங்கமார்க்கத்தில் பிரவேசிப்பான். இந்திரியங்களா லும் எண்ணங்களாலும் அவனுக்குஅலுப்பும் வெ றுப்பு முண்டாய், காமக் ரோதங்களிலிருந்தும் அஹங்காரத்திலிருந்தும், விடுபட்டுப் பரிபூர்ணநிர் வாணனந்தத்தை யடைவா'' னென்றார். அதைக் கேட்டு ஜடிலர்களின் தலைவர்களும் சிஷ்யர்களும் புத்தரையும் தர்மத்தையும் ஸங்கத்தையும் சரண மடைந்தார்கள்.

பிறகு புத்தபகவான் தன் சிஷ்யர்களுடன் மகத ராஜதானியான ராஜ கிருஹத்திற் குச் சென்றார். அங்குள்ளவர்கள் அவரையும் மஹாகாசியபரையும் கண்டு ஸந்தேஹித்து "ஸித் தார்த்தர் பூர்ண ஞானத்தை யடைந்து விட்டா ரென்று எல்லோரும் சொல்லுகிறார்களே. இப் பொழுது காசியபரென்ற மதாசாரியருடன் வந் திருக்கிறாரே. இவர்களில் யார் குரு, யார் சிஷ்ய னென்று தெரியவில்லை.'' யென்று சொல்லிக் கொண்டார்கள். அதை அறிந்த பகவான் "காசியபா! நீ அக்னிஹோத்ரத்தையும் தபஸை யும் விட்டு என்னைச் சரணமடைந்ததற்குக் காரணமென்ன? சொல்'' லென்றார். காசியபர் "கர்ம மார்க்கத்தால் நான் அடைந்த பிரயோஜ னம்' ஸம்ஸார சக்கிரத்தில் கட்டுண்டு அக்ஞானத்

திற்கும் துக்கத்திற்கும் ஆளானேன். இந்த
அடிமைத்தனத்தை ஒழித்தேன். தபஸை
யும் விரதங்களையும் விட்டு நிர்வாண ஸுகத்தை
யடையும் மார்க்கத்தில் பிரவேசித்தே''னென்றார்.
அப்போது மகததேசத் தரசனான பிம்பிஸாரன்
அவருடைய உபதேசங்களை வெகு சிரத்தை
யுடன் கேட்டு, அவருக்குச் சிஷ்யனாய்த் தன் வீட்
டில் பிக்ஷை செய்வித்து, வேணுவனமென்ற
தோட்டத்தை அவருக்கும் அவருடைய பிக்ஷுக்
களுக்கும் வஸிப்பதற்காகக் கொடுத்தான். அக்
காலத்தில் ஸஞ்ஜயனென்ற ஆசாரியனுடைய
சிஷ்யர்களில் முக்கியமான ஸாரீபுத்ரன் மௌத்
கலாயனனென்ற இரண்டு பிராம்மண பண்டிதர்
கள் புத்த பகவானைத் தர்சித்து, அவருடைய உப
தேசங்களைக் கேட்டு ஸந்தேஹந் தீர்ந்து, தங்களு
டைய சிஷ்ய கோடிகளுடன் ஸங்கத்தில் சேர்ந்
தார்கள். இவர்களே அவருக்குப் பிற்காலத்தில்
முக்கிய சிஷ்யர்கள். ஸாரீபுத்ரர் மஹா பண்டி
தர், மஹாஞானி. மௌத்கலாயனர் சிறந்த
யோகஸித்திகளுடையவர்.

அநாத பிண்டிகனென்ற ஓர் தனிகன் சிராவ
ஸ்தியிலிருந்து ராஜ கிருஹத்திற்கு வந்து, பக
வானுடைய உபதேசத்தைக் கேட்டு பாபம் நீங்
கிக், கவலை யொழிந்து "ஸ்வாமி! நானும் ஸன்மார்

க்கத்தில் நடந்து இயன்றவரையில் பரோபகாரஞ் செய்யவேண்டுமென்று நிச்சயித்துவிட்டேன். ஆனால் என் வீடுவாசலையும் பெண்டு பிள்ளைகளையும் தன தான்யங்களையும் தொழிலையும் விட்டுப் பிக்ஷுகளைப்போல் நடக்கவேண்டுமா" வென்றான். அதற்குப் பகவான் "ஆர்ய அஷ்டாங்க மார்க்கத்தில் நடக்கும் யாருக்கும் ஞானமும் ஆனந்தமும் கிடைக்கும். நீ சொன்ன எல்லாவற்றையும் பற்றுதலின்றி அனுபவித்து சரியாய் உபயோகித்தால் தோஷமில்லை. அவை யாவும் பரோபகாரத்திற்காகவே உன்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதென்ற புத்தியுடன், நீ வீட்டிலிருந்தே பெண்டு பிள்ளைகளுடன் இல்லறம் நடத்தித், தொழில்களைச் செய்து தனத்தை ஸம்பாதித்து, அதனுடன் நற்குணங்களையும் ஞான பரிபக்வத்தையும் அடையலாம். விஷயப்பற்றுள்ளவன் எல்லாவற்றையும் துறந்து பிக்ஷுவாய்க் குகையில் வஸித்தும் பயனில்லை. ததாகதர் உபதேசிக்கும் தர்மத்தை அனுஷ்டித்துப் பயன் பெறுவதற்காக யாரும் உலகத்தைத் துறக்கவேண்டியதில்லை. வீடு வாசலில்லாமல் அலையவேண்டியதில்லை. ஒவ்வொருவனும் அஹங்காரம் மோகம் காமம் கோபம் இவைகளை ஒழித்துச் சுத்தமான மனஸுடன் இருந்தால் அவன்

வீட்டிலிருந்தாலும் தபோவனத்திலிருப்பது போலவே; குடும்பத்துடனிருந்தாலும் ஸந்யாஸியே" யென்றார். அதைக் கேட்டு அநாத பிண்டிகன் தன் அளவற்ற தனத்தை ஸங்கத்தின் விஷயமாய் உபயோகிக்க நிச்சயித்துச், சிராவஸ்திக்குத் திரும்பிவந்து, ஜேதவனமென்ற தோட்டத்தை மிகுந்த விலைகொடுத்து வாங்கி, ஸங்கத்திற்குத் தானஞ்செய்தான்.

அந்த ஸமயத்தில் புத்தபகவானும் சிஷ்ய கோடிகளும் அங்கே வந்த பொழுது, பிரஸேனஜித்தென்ற கோஸலாதிபதி அவருடைய உபந்யாஸத்தைக் கேட்க வந்தான். அவன் விஷய ஸுகங்களில் ஆசையுள்ளவனென்றும், செல்வத்திலும் அதிகாரத்திலும் மிகுந்த பற்றுள்ளவனென்றும் பகவான் அறிந்து, "பூர்வ ஜன்ம பாபத்தால் இழி குலத்திற் பிறந்தவர்களும் ஸாதுவைக் கண்டால் பூஜிக்கிறார்கள். அப்படியிருக்கப் பூர்வ ஜன்ம புண்யத்தால் உன்னைப்போல் மண்டலாதிபதியாய்ப் பிறந்தவன், ததாகதரைக் கண்டால் பக்தியுடன் பூஜிப்பானென்பதில் ஆச்சரியமுண்டோ? மஹாராஜ! நான் சொல்லும் உபதேசத்தை நன்றாய்ச் செவிகொடுத்துக்கேட்டு மனனஞ்செய்து, ஹிருதயத்தில் பதிக்கக்கடவாய். நமது புண்ய பாபங்கள் நிழலைப்போல் நம்மைப் பின் தொடரும். ஆனால் ஜீவகாருண்யமுள்ள

மனிதனே ஸர்வோத்தமன். உனக்கு ஒரே குழந்தையிருந்தால் அவனிடத்தில் எப்படிப் பிரீதி வைப்பாயோ அப்படி உன் பிரஜைகளிடத்தில் நடந்துகொள். அவர்களை வருத்தாதே அழிக்காதே. உன் தேஹத்தையும் இந்திரியங்களையும் அடக்கு; துன் மார்க்கத்தையும் துஷ்டர்களுடைய ஸஹவாஸத்தையும் விடு; ஸன் மார்க்கத்தில் நட; பிறரை ஹிம்ஸித்து நீ மேன்மையடைய விரும்பாதே. ஏழைகளுக்கும் தீனர்களுக்கும் மாதா பிதாவாயிருந்து, அவர்களுடைய துக்கத்தை நீக்கு. உன் பதவியையும் அதிகாரத்தையும் செல்வத்தையுமே பெரிதா யெண்ணிக் கர்வங் கொள்ளாதே. உன்னிடத்திலில்லாத நற்குணங்களை இருப்பதாய்த் தப்பு ஸ்தோத்ரஞ் செய்யும் அயோக்யர்களைச் சேர்க்காதே. தீப்பிடித் தெரியும் மரத்தில் பக்ஷிகள் தங்குமா? காம க்ரோதங்களால் எரியும் மனதில் ஸத்யமும் ஞானமும் விளங்குமா? தன்னடக்கமும் பொறுமையும் ஜீவகாருண்யமும் சாந்தியுமே உன் ராஜ்யம், உன் செல்வம், உன் பதவி, உன் ஸைன்யம். அவைகளுக்குக் கேடுவராமல் காப்பாற்றி விருத்திசெய். இந்த உபதேசம் துறவிகளுக்கும் பிக்ஷுகளுக்குமல்லவா? நமக்கேனென்று இராதே. கூலிக்காரனுக்கும் அரசனுக்கும் பண்டிதனுக்கும் பாம

ரனுக்கும் போகிக்கும் அக்ஞானிக்கும் எல்லோர்க்கும் இது அவசியமானது. மலைக் குகையில் தபஸ்செய்யும் பிக்ஷுவிற்கும் குடும்பிக்கும் பேதமில்லை. அதோகதியை அடையும் தபஸ்விகளுமுண்டு; நிர்வாணத்தை அடையும் குடும்பிகளுமுண்டு. ஆகையால் நீ அரண்மனையிலிருந்தாலும், ஸிம் ஹாஸனத்தில் வீற்றிருந்தாலும், ரத கஜ துரக பதாதிகளால் சூழப்பட்டாலும், குடும்பத்தின் நடுவிலிருந்தாலும், பற்றில்லாமல் சாந்தியுள்ளவனாய்த் தாமரையிலைத் தண்ணீர் போல் உன் கடமையைச் செய்யக்கடவா" யென்றார்.

பகவான் ராஜ கிருஹத்திலிருக்கும்பொழுது சுத்தோதனனென்ற அரசன் "நான் இறக்குமுன் என் புத்ரனைப் பார்க்க விரும்புகிறேன். எல்லோரும் அவனுடைய உபதேசத்தைக் கேட்டு மேன்மை யடைந்தார்கள். அவனுடைய பிதாவும் பந்துக்களும் அந்த பாக்யத்தைப் பெறவில்லை" யென்று ஸமாசாரஞ் சொல்லியனுப்பினார். அதற்கிணங்கிப் புத்தபகவான் சிஷ்யர்களுடன் கபில வாஸ்துவுக்குச் சென்றார். சுத்தோதனன் தன் மந்திரி பரிவாரங்களுடன் அவரை எதிர்கொண்டழைத்தான். "ஸித்தார்த்தா! என் அருமைக் குழந்தாய்! உன்னை விட்டுப் பிரிந்து ஏழு வருஷங்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

களாயிற்றே'' யென்று கூவி, அவரை இறுகத் தழுவவேண்டுமென்று ஆசை கொதித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவருடைய அழகையும் தேஜஸையும் சாந்தியையும் கண்டு, எல்லையற்ற பக்தியும் விசுவாஸமும் உண்டாயிற்று. தன் மகனுடைய ரூபமேயொழிய மற்ற யாவும் மாறி விட்டன. அவனை அறியாமல் அவன் கை கூப்பி முதலில் அவரை நமஸ்கரித்து, "என் ராஜ்யம் முழுவதையும் கொடுத்தாவது தங்களை மறுபடியும் அடைய விரும்பினேன். ஆனால் ஸகலப் பிரபஞ்சத்தையும் திரணமாக நினைத்த தங்களுக்கு இது ஒரு பொருட்டா''வென்றான். பகவான் "தங்களுடைய மனதிலுள்ள ப்ரீதியையும் அன்பையும் நான் நன்றாயறிவேன். ஆனால் அந்த ப்ரீதியையும் அன்பையும் ஸகல ஜீவகோடிகளிடத்திலேயும் வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் ஸித்தார்த்தனென்ற ஓர் லௌகிகப் புத்ரனுக்குப் பதிலாய், ஸகல லோக குருவாயும் தர்ம ப்ரவர்த்தகராயும் ஸகல ஜீவ மித்ரனுமிருக்கும் ததாகதரைப் புத்ரனாய் அடைவீர்களெ''ன்றார். அதைக் கேட்ட அரசன் ஆனந்தத்தால் கண்ணீர் பெருக "என் கண்களை மறைத்திருந்த இருள் நீங்கிற்று.

என்னைப் பிடித்த துக்கமென்ற பேய் பறந்து போயிற்று. சாந்தியும் ஸந்தோஷமும் குடிகொண்டன. தங்களுடைய உபதேசத்தை இன்னும் கேட்டுத் தன்யனுவேனென்"ன்று விடைபெற்றுக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். மறுநாட்காலையில் பகவான் தன் பிக்ஷுகளுடன் நகரத்தில் பிரவேசித்து, வீடுவீடாய் பிக்ஷை வாங்கிக்கொண்டு போனார். அதைக் கேள்வியுற்ற அரசன் பரபரப்புடன் ஓடிவந்து "என்னை இப்படி அவமானஞ் செய்யலாமா? தங்களுக்கும் தங்களுடைய அடியார்களுக்கும் எப்பொழுதும் குறைவில்லாமல் அன்ன பானங்களைக் கொடுக்க எனக்குச் சக்தியில்லையா" வென்றான். பகவான் "இது என் முன்னோர்களின் ஆசாரம்". அரசன் "அதெப்படி? தங்களுடைய முன்னோர்கள் மஹாராஜாக்கள். ஒருவரும் இப்படி வீடு வீடாய்ப் பிக்ஷை எடுத்ததில்லை." பகவான் "மஹாராஜ! தாங்கள் அந்த ராஜஸந்ததியில் பிறந்தவர்கள். என் பரம்பரை வேறு. அனாதி காலமாய் லோகத்தில் தர்மோபதேசஞ் செய்த புத்தர்களுடைய ஸந்ததியைச் சேர்ந்த நான், அவர்களுடைய ஆசாரத்தை அனுஸரித்து வீடு வீடாய்ப் பிக்ஷையெடுத்து ஜீவனம் செய்கிறேன்.

அதிருக்கட்டும். ஒருவனுக்கு அளவற்ற திரவியம் கிடைத்தால் அதில் உத்தமமான பாகத்தைத் தன் பிதாவிற்கு ஆனந்தத்துடன் கொடுப்பதுபோல், தர்மமென்ற ஒப்பற்ற நிதியை நான் ஸம்பாதித்துத் தங்களுக்குக் கொடுக்கிறேற" னென்று, "அக்ஞானமென்ற ஸ்வப்னங்களை விட்டொழிந்து ஞானக்கண்களைத் திறந்துபார். தயங்காதே. பரம தத்வத்தைச் செவிகொடுத்துக் கேள். மனதில் பதித்துவை. தர்மத்தைக் குறைவற அனுஷ்டிப்பாய். நித்யமாயும் நிகரற்றதாயும் எல்லையற்றதாயுமிருக்கும் ஆனந்தத்தையடையலா"மென்றார். பிறகு அரசன் பகவானைச் சிஷ்யர்களுடன் அரண்மனைக்கு அழைத்துப் போய்ப் பூஜித்தான்.

யசோதரையென்ற (பூர்வாசிரமத்தில்) அவருடைய பார்யையும் ராஹுலனென்ற புத்ரனும் மாத்ரம் அங்கே வரவில்லை. அரசன் அவளுக்குச் சொல்லியனுப்ப, "நான் அவருடைய ப்ரீதிக்கும் விசுவாஸத்திற்கும் பாத்ரமாயிருந்தால் ஸித்தார்த்தர் நானிருக்குமிடத்திற்கு வந்து என்னைப் பார்ப்பாரெ"ன்று பதிலனுப்பினள். பகவான் தன் பந்துக்களெல்லோரையும் மரியாதை செய்து, "யசோதரை எங்கே யெ"ன்றார். அவளுடைய

அபிப்பிராயத்தை அரசனால் அறிந்து, தானும் தன் சிஷ்யர்களான ஸாரீபுத்ரரும் மௌத்கல்யாய னரும் மாத்ரம் அந்தப்புரத்திற்குச் சென்றார்கள். "ஸம்ஸார பந்தத்திலிருந்து நான் விடுபட்டவன். ஆனால், ராஜபுத்ரியோ அப்படி விடுபட்டவளல்ல. என்னை வெகு காலமாய்ப் பார்க்காததால் அவள் எல்லையற்ற துக்கங்கொண்டிருக்கிறாள். அவ ளுடைய துக்கத்திற்கு இடங்கொடுக்காவிட்டால் ஹிருதயம் பிளந்து இறப்பாள். அவளுடைய அபார பிரீதியாலும் விசுவாஸத்தாலும் அவள் ஒருவேளை ததாகதரைத் தொட்டாலும் நீங்கள் தடுக்கவேண்டாமெ"ன்று சொன்னார். பகவா னைக் கண்டவுடன் யசோதரை, வெள்ளத்தால் கரைபுரளும் நதியைப்போல், மனந் தாங்காமல், தான் பர்த்தாவென்று முன்பு பழகின ஸித்தார்த் தர் இப்பொழுது ஜகத்குருவாயும், தர்மோபதேசக ராயும், லோகநாதனாயுமிருக்கும் புத்த பகவா னென்பதை மறந்து, கோவென் றலறிக்கொண்டு அவருடைய பாதங்களில் விழுந்து கண்ணீர்விட் டழுதாள். பிறகு அரசனும் பிக்ஷுகளும் இருந் ததைக் கண்டு வெட்கமடைந்து, எழுந்து சற்று தூரத்தில் பக்தியுடன் கைகட்டி நின்றாள். அப் பொழுது அரசன் "ஸ்வாமி! யசோதரையை மன்

னிக்கவேண்டும். இந்த ஏழு வருஷங்களாய்த் தாங்கள் அநுஷ்டிக்கும் கடுமையான விரதங்களை இவளும் அநுஷ்டித்துத், தங்களையே த்யானித்துக்கொண்டு ஸகல போகங்களையும் வெறுத்து, இதர ஞாபகமே யில்லாமல் காலங்கழிக்கிறாள். அவருடைய அபார ப்ரீதியால் இப்படிச் செய்தாளே யொழிய வேறல்ல'' வென்றான். பகவான் அவளை அழைத்துப் ப்ரீதியுடன் பேசி, அவள் பூர்வ ஜன்மங்களில் ஒவ்வொன்றிலும் தனக்குப் பார்யையாயிருந்ததையும், தன் விரதமும் கோரிக்கையும் நிறைவேறும்படி அநுகூலமாய் நடந்துகொண்டதையும், அந்த மஹா புண்யத்தின் பயனாகவே தான் புத்தரான இந்த ஜன்மத்திலும் தனக்குப் பார்யையாயிருக்கும் மஹாபாக்யத்தைப் பெற்றதையும், அவளுக்கு நிகர் யாருமில்லை யென்பதையும் எடுத்துச் சொன்னார்.

பிறகு மஹாப்ரஜாபதிக்கும் சுத்தோதனனுக்கும் பிறந்த புத்ரனை ஆனந்தனும், யசோதரையின் ஸஹோதரனை தேவதத்தனும், அனிருத்தனென்ற தத்வஞானியும், உபாலியென்ற நாபிதனும், புத்தரைச் சரணமடைந்து சிஷ்யர்களானார்கள். அவர்களில் ஆனந்தர் பகவானை விட்டு ஒரு நிமிஷமும் பிரியாமல், அவருடைய

நிர்வாண தசைவரையில் ஸகல ரக்ஷையும் செய்துவந்தார். பகவானுடைய பரம ப்ரீதிக்குப் பாத்ரம் இவரே.

பிறகு ஒரு நாள் யசோதரை, ஏழு வயதுள்ள ராஹுலனை அலங்கரித்துக், "குழந்தாய்! கோடி ஸூர்யனைப் போல் விளங்கும் அதோ விருக்கும் மஹான் உன் பிதா. அவரிடத்தில் நான்கு நிகரற்ற நிதிகள் இருக்கின்றனவாம். நான் அவைகளைப் பார்த்ததில்லை. நீ போய் 'அந்தப் பிதுரார்ஜித தனத்தை நியாயப்படி உனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேளெ"ன்றாள். ராஹுலன் பிக்ஷான்னத்தைப் புஜித்துக்கொண்டிருந்த பகவானிடத்தில் போய், மிகுந்த ப்ரீதியுடன் பயமில்லாமல் "அப்பா! தங்களுடைய நிழலில் இருப்பதுகூடச் சொல்ல முடியாத ஸுகத்தைக் கொடுக்கிறதே"ன்றான். ததாகதர் ஒன்றுஞ் சொல்லாமல் ஸாரீபுத்திரனைப் பார்த்து "என் மகன் தன் பிதுரார்ஜித தனத்தை வேண்டுமென்கிறான். அனித்யமான செல்வத்தை அவனுக்குக் கொடுத்து, அவனுக்குக் கவலையும் வருத்தமும் வளரும்படி செய்யக்கூடாது. என்றுமழியாத நிர்வாண ஸுகத்தைக் கொடுக்கும் மார்க்கத்தையே அவனுக்குக்

பித்ரார்ஜித தனமாய்க் கொடுப்பே"னென்று, "குழந்தாய்! என்னிடத்தில் தங்கம், வெள்ளி, ரத்னங்கள், பாஷாண, குதிரைகளில்லை. ஆனால், ஞானரூபமான செல்வம் உனக்கு வேண்டியிருந் தால், அவைகளை வைத்துக் காப்பாற்றுவதற்குத் திறமை யிருந்தால், நான்கு பரம தத்வங்களையும், அவைகளை அடையும் அஷ்டாங்க மார்க்கத்தை யும் உபதேசிக்கிறேன். எது வேண்டுமெ"ன்றார். ராஹுலன் உறுதியுடன் "ஞான தனமே வேண்டு"மென்றான். அன்று முதல் அவன் பக வானைச் சிஷ்யனாய் அடைந்து, அவருடனே வஸி த்து வந்தான்.

பிறகு வெகுகாலங் கழித்துச், சுத் தோதனன் வயது மெலிந்து பிணியால் வாடி, தான் தேஹத்தை விடவேண்டிய காலம் ஸமீ பித்தமதென் றறிந்து, புத்த பகவானுக்குச் சொல்லி யனுப்பினான். அவர் உடனே அவனிடத்திற்கு வந்து, ஸகல சுச்ரூஷைகளையும் செய்து, பரம தர் மத்தை உபதேசித்தவுடன், அவன் பூர்ணஞான மடைந்து, புத்தபகவானுடைய மடியில் தலையை வைத்துக்கொண்டே தேஹத்தை விட்டு, நிர் வாண பதவியை அடைந்தான்.

ஸ்திரீகளை ஸங்கத்தில் சேர்க்க வேண்டுமென்று பல தடவை யசோதரையும் மஹாப்ரஜாபதியும் இன்னும் பல பெண்மணிகளும் ததாகதரை மிகவும் வேண்ட, அவர் நெடுநேரம் யோசித்து, அவர்களைச் சிஷ்யர்களாக்கி, உபாஸிகைகளென்றும் பிக்ஷுணிகளென்றும் பெயரிட்டுத், தனியே ஒரு ஸங்கத்தை ஏற்படுத்தினார். அப்பொழுது பிக்ஷுக்கள் "ஸ்வாமி! நாங்கள் ஸ்திரீகளிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய விதமெப்படி" யென்றார்கள். பகவான் "ஸ்திரீகளை ஒரு பொழுதும் கண்ணெடுத்துப் பார்க்கவேண்டாம். அப்படிப் பார்க்கும்படி நேர்ந்தாலும் அவளைப் பார்க்காததுபோல் நடக்கவேண்டும். அவளுடன் பேசவேண்டாம். அப்படிப் பேசும்படி நேர்ந்தாலும், பிக்ஷுவாகிய நான் பாபம் நிறைந்த இவ்வுலகத்தில் தாமரையிலைத் தண்ணீர் போல் சேற்றால் அசுத்தமடையாமல் இருக்கக் கடவேன்னென்று சுத்தமான மனதுடன் பேசுங்கள். உங்களைவிட வயஸ் முதிர்ந்தவளாயிருந்தால் அவளைப் பெற்றதாயைப் போலவும், ஸமமான வயஸுடைவளா யிருந்தால் உடன் பிறந்தவளைப் போலவும், குறைந்த வயஸுடையவளாயிருந்தால் பெண்ணைப்போலவும் நினையுங்கள். ஸ்திரீயை ஸ்திரீ

யென்று பார்க்கிறவனும், ஸ்திரீயை ஸ்திரீ யென்று தொடுகிறவனும் விரதத்தை மீறினவன். ததாகதரின் சிஷ்யக் கூட்டத்திலிருந்து தள்ளப் பட்டவன். அசுத்தமான எண்ணங்களுடன் ஸ்திரீயைப் பார்ப்பதைக் காட்டிலும், பழுக்கக் காய்ச்சின இரும்பால் கண்களை எரிப்பது நலம். அசுத்தமானமனதுடன் ஓர் ஸ்திரீயுடன் தனித்திருப்பதைக் காட்டிலும்; கோபங்கொண்ட புலியின் வாயில் தலையை நுழைப்பது நலம். ஆகையால் நீங்கள் நடக்க வேண்டிய தெப்படி? ஸ்திரீயின் அழகையும் லாவண்யத்தையும் ரூபத்தையும் சொற்களையும் மனுஷ்யர்களை மயக்கும் பல வித உபாயங்களையும், உங்களுக்குப் பரம சத்ருக்களென்றும் யமனுடைய காலதண்டமென்றும் நினைத்து மனதை யடக்குங்கள். புத்தரையும் தர்மத்தையும் தியானஞ் செய்யுங்களென்” றார்.

பிக்ஷுகளின் ஸங்கத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும்எப்பொழுதும் அடியிற் கண்ட வஸ்துக்களை வைத்துக்கொண் டிருக்கவேண்டும்:— வஸ்திரம், அரைக்கச்சை, பிக்ஷாபாத்ரம், தண்ணீர் வடிக்கக்கூடும் வஸ்திரம், க்ஷௌரக்கத்தி,ஊசி, விசிறி, மிதியடிகள். அதிகாலையில் பொழுது விடியுமுன் எழுந்து, குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்

செய்து, மடத்தையும் போதிவிருக்ஷத்தின் அடியையும் சுத்தஞ் செய்து, அன்றைக்கு வேண்டிய ஜலத்தைக் கொண்டு வந்து வடிக்கட்டி வைத்து விட்டுத், தியானத்திற்கு ஆரம்பிக்கவேண்டும்; பிறகு போதி மரத்தினடியில் புஷ்பங்களை ஸமர்ப்பித்துப், பிக்ஷாபாத்ரத்தை எடுத்துக்கொண்டு வீடு வீடாய்ப் பிக்ஷை வாங்கவேண்டும். வீட்டிற்குள் போகக்கூடாது. வெளியே மௌனமாய் நின்றுகொண்டு, கிருஹஸ்தர்களால் கொடுக்கப்பட்ட அன்னத்தை வாங்கிக்கொண்டு, மனவில் அவர்களை ஆசீர்வாதஞ் செய்யவேண்டும். ஒன்றும் கொடுக்காவிட்டாலும் அவர்களை அப்படியே ஆசீர்வாதம் செய்துவிட்டு, அங்கே தங்காமல் அப்புறம் போகவேண்டும். மடத்திற்குத் திரும்பி வந்து, கைகால்களைக் கழுவிக்கொண்டு, போஜனஞ் செய்து பிறகு தியானிக்க வேண்டும். பிறகு மந்த்ரங்களைப் படித்து கொண்டிருந்து, அஸ்தமன ஸமயத்தில் மடத்தையும் போதி விருக்ஷத்தினடியையும் சுத்தஞ் செய்து, தீபத்தை ஏற்றிவிட்டுத், தன் மூத்தோர்களின் உபதேசங்களையும் பிரஸங்கங்களையும் சிரத்தையுடன் கேட்டுத், தான் அன்று செய்திருக்கும் தவறுகளை அவரிடத்தில் தெரிவித்துப், புத்த

பகவானையும் தர்மத்தையும் ஸங்கத்தையும் தியானித்துக்கொண்டே நித்ரை செய்யவேண்டும். தன் தேஹத்தையும் ஸுகதுக்க உணர்ச்சியையும் மனதையும் தர்மத்தையும் பற்றித் தியானஞ் செய்யவேண்டும். தசசீல மென்ற பத்து விதிகளை ஒவ்வொரு பிக்ஷுவும் அனுஷ்டிக்கவேண்டும்.

(1) எந்தப் பிராணியையும் கொல்லக்கூடாது. (2) பிறருடைய பொருளைத் திருடக்கூடாது. (3) ஸ்திரீகளுடன் சேரக்கூடாது. (4) பொய் கடுஞ்சொல் பரநிந்தை முதலியவைகளை விலக்கவேண்டும். (5) மயக்கத்தைக் கொடுக்கும் பதார்த்தங்களை உபயோகிக்கக்கூடாது. (6) நடுப்பகலுக்குப் பிறகு போஜனஞ் செய்யக்கூடாது. (7) பாட்டு நர்த்தனம் வாத்யங்கள் நாடகம் முதலிய தமாஷ் பொழுதுபோக்குகளை விலக்கவேண்டும். (8) மாலைகள் வாஸனைத்திரவியங்கள் பூச்சுகள் தைலங்கள் ஆபரணங்கள் முதலியவைகளை விலக்க வேண்டும் (9) உயரமாயும் அகலமாயும் மிருக்கும் படுக்கைகளை உபயோகிக்கக்கூடாது. (10) தங்கம் வெள்ளி ரத்னங்களை வைத்துக்கொள்ளக்கூடாது. இவைகளில் முதல் ஐந்தும் (பஞ்சசீலம்) பிக்ஷுகளாலும் கிருஹஸ்தர்களாலும் அனுஷ்டிக்கப் படலாம். ஆனால் 3-வது விதி கிருஹஸ்தர்களுடைய விஷ

யத்தில் தன் பார்யையைத் தவிர இதர ஸ்திரீகளைச் சேரக்கூடாதென்று மாற்றவேண்டும். 6, 7 8 வது விதிகள் கிருஹஸ்தர்களால் இயன்றவரையில் அனுஷ்டிக்கப்படலாம்; விசேஷ புண்யத்தைக் கொடுக்கும். கிருஹஸ்தர்கள் சிலகாலம் வரையில் பிக்ஷுகளின் மடத்தில் வைத்துக்கொண்டு தசசீலங்களை அனுஷ்டிப்பதுமுண்டு. 1, 3,5 வது விதிகளை அனுஷ்டிக்காததால் லோகத்தில் செய்யப்படும் ஸகல பாபங்களும் அவைகளின் பயனான துக்கமும் உண்டாகின்றன. பத்து வயதுக் குட்பட்டவனைச் சிஷ்யனாய்ச் சேர்க்கக் கூடாது. 20 வயதிற்கு மேற்பட்டவனையே பிக்ஷுவாய்ச் சேர்க்கவேண்டும். ஒவ்வொரு பக்ஷத்திலும் அஷ்டமி சதுர்த்தசி திரயோதசி யென்ற மூன்று தினங்களும் உபவாஸத் தினங்களாய் அனுஷ்டிக்க வேண்டும். அந்தத் தினங்களில் உபவாஸமிருந்து, தியானம் மதக்கிரந்த அத்யயனம் தர்மப் பிரஸங்கம் முதலிய நற்கருமங்களால் பொழுதைப் போக்கவேண்டும். பிக்ஷுக்கள் தாங்கள் செய்திருக்கக் கூடும் தவறுகளை ஸங்கத்திற்கு முன்பாகத் தெரிவித்து மனசுத்தி அடையவேண்டும். இதற்கே பிராதி மோக்ஷமென்று பெயர். அந்தத் தினங்களில் கிருஹஸ்

தர்கள் அந்தந்த மடங்களில் (விஹாரம்) கூடிப், பிக்ஷுக்களின் " பிரஸங்கங்களைக் கேட்பார்கள். அந்தத்தினங்களில் தங்களுடைய குற்றங்களைத் தெரிவிக்காத பிக்ஷுக்கள் ஹபாபத்தைச் செய்தவர்களாவார்கள்.

ஒரு ஸமயத்தில் சில பிக்ஷுக்கள் லௌகிக புத்தி மேல்நாடித் தாங்கள் ஒருவர்க்கொருவர் பொய்யாய்ப் புகழ்ந்துகொண்டு, அதிமானுஷ்ய சக்திகளையுடையவர்களென்று கிருஹஸ்தர்களுக்குக் காட்டி, அவர்களால் பூஜிக்கப்பட்டு, விசேஷ ஸௌக்யங்களையும் பொருள்களையும் ஸம்பாதித்ததைக் கேள்விப்பட்டுப், பகவான் எல்லோரையும் அழைத்து "இன்று முதல் தன் ஞானத்தையும் சக்தியையும் ஆசாரத்தையும் பற்றி மற்றொருவனுடன் சொல்லிக்கொள்ளுகிறவனும், மந்திரங்களாலும் யந்திரங்களாலும் சக்திகளை அடைய விரும்புகிறவனும், அவைகளால் பிறரை வசப்படுத்துகிறவனும், ஸங்கத்திலிருந்து விலக்கப்படுவானென்" று ஆக்ஞாபித்தார்.

புத்த பகவான் வருஷத்தில் எட்டு மாஸங்கள் வரையில் விசேஷமாய் ஓரிடத்திலும் தங்காமல் பிரயாணஞ்செய்துகொண்டு, அங்கங்கே ஜனங்களுக்குத் தர்மத்தை. உபதேசிப்பர். மழைக்காலத்

தில் நாலு மாஸங்கள் வரையில் அரசர்களாலும் தனவான்களாலும் அங்கங்கே கட்டப்பட்ட பர்ண சாலைகளிலும் விஹாரங்களிலும் தங்குவார். இவைகளில் ஜேதவனம் வேளுவனம் பூர்வாராமம் ந்யக்ரோதாராமம் கோஷிதாராமம் என்றவை வெகு பிரசித்தி பெற்றவை.

புத்த பகவானுடைய தர்மோபதேசம்:—ஒரு நாட்காலையில் சிருகாலனென்ற கிருஹஸ்தன் ஸ்நானஞ்செய்து கை கூப்பி, ஸகல திக்குகளையும் நோக்கித் தர்ப்பணஞ் செய்துகொண்டிருந்தான். பகவான் "ஏனிப்படிச் செய்கிறாய்" யென்றார். அவன் "நான் முன்னோர்களின் ஆசாரப்படி தர்ப்பணம் செய்து ஸகல திக்குகளிலிருந்தும் எனக்குக் கெடுதி நேராமல் காத்துக்கொள்ளுகிறேனென்"றான். பகவான் "நீ செய்வது ஸரியே. ஆயினும் கிழக்கில் பெற்றோர்களைக் குறித்தும், தெற்கில் குருக்களைக் குறித்தும், மேற்கில் பெண்டு பிள்ளைகளைக் குறித்தும், வடக்கில் பந்து மித்ரர்களைக் குறித்தும் ஆகாசத்தில் ஸாதுக்களைக் குறித்தும் பூமியில் தனக்குத் தாழ்ந்தவர்களைக் குறித்தும் தான் செய்ய வேண்டிய கடமைகளைக் குறைவறச் செய்வதே ஸரியான தர்ப்பணமாகும். விசேஷ பயனைக் கொடுக்கும்.

(1) பெற்றோர்கள் குழந்தைகளைத் துன்மார்க்கத்திலிருந்து விலக்கவேண்டும். (2) நன்மார்க்கத்தில் பழக்கவேண்டும் (3) உபயோகமுள்ள வித்தையையாவது தொழிலையாவது கற்பிக்கவேண்டும் (4) தகுந்தபடி விவாஹஞ்செய்விக்கவேண்டும். (5) பித்ரார்ஜிதத்தை நியாயமாய்ப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

(1) குழந்தைகள் தங்களை வளர்த்த பெற்றோர்களைக் காப்பாற்றவேண்டும், (2) அவர்கள் செய்து வந்த குடும்பக் கடமைகளை தாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் (3) அவர்களுடைய பொருளைக் காப்பாற்றவேண்டும் (4) அவர்களுக்கு சந்ததியாய் இருக்கத் தகுந்தபடி நடக்கவேண்டும். (5) அவர்கள் காலஞ் சென்றபிறகு அவர்களுடைய ஞாபகத்தைக் கொண்டாட வேண்டும்.

(1) சிஷ்யர்கள் குருக்களைக்கண்டவுடன் எழுந்திருக்கவேண்டும் (2) சுச்ருஷை செய்யவேண்டும். (3) கட்டளைகளை நிறைவேற்றவேண்டும். (4) அவர்களுடைய சௌகர்யத்திற்கு வேண்டிய பதார்த்தங்களை கொடுக்கவேண்டும். (5) அவர்களுடைய உபதேசத்தைச் சிரத்தையாய்க் கேட்கவேண்டும்.

(1) குருக்கள் சிஷ்யர்களுக்கு வித்யைகளையும் கலைகளையும் உபதேசிக்க வேண்டும், (2) உபதே-

சித்தத்தை மறக்காமலிருக்கச் செய்யவேண்டும். (3) ஸன்மார்க்கத்திலேயே பழக்கவேண்டும் (4) பந்துக்களிடத்திலும் மித்ரர்களிடத்திலும் அவர்களைப் பற்றி சிலாகிக்கவேண்டும். (5) அபாயங்களிலிருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டும்.

(1) கணவன் மனைவியை மரியாதையுடன் நடத்தவேண்டும் (2) பிரியத்துடன் நடத்தவேண்டும் (3) வேறொருவரை விரும்பக்கூடாது. (4) பிறரால் அவளுக்குக் கௌரவத்தை செய்விக்கவேண்டும். (5) தகுந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் கொடுக்கவேண்டும்.

(1) மனைவி புருஷனுடைய வீட்டுக் காரியங்களை ஸரிவர நடத்தவேண்டும். (2) அநாவசியமான செலவுசெய்யாமல் கெட்டியாய் இருக்கவேண்டும். (3) திறமையுடனும் சுறுசுறுப்புடனும் ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும். (4) பந்து மித்ரர்களைத் தகுந்தபடி உபசரிக்கவேண்டும். (5) பதிவ்ரதா தர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும்.

(1) மித்ரர்களிடத்தில் மர்யாதையாய்ப் பேசவேண்டும். (2) அவர்களுடைய க்ஷேமத்தை விருத்தி செய்யவேண்டும். (3) தனக்கு ஸமான

மாய் அவர்களை நடத்தவேண்டும். (4) தன்பொருள்களை அவசியம் நேரும்பொழுது அவர்களுக்குக் கொடுத்துதவ வேண்டும், (5) அடிக்கடி அவர்களுக்குப் பஹுமானஞ் செய்யவேண்டும்.

(1) மித்ரர்கள் நமக்கு அபாயகாலத்தில் அடைக்கலங் கொடுக்கவேண்டும். (2) கஷ்டம் நேரும் போது கூட இருந்து உதவி செய்ய வேண்டும். நாம் அஜாக்ரதையாயிருக்கும் பொழுது நம்மைக் கவனித்து ரக்ஷிக்கவேண்டும். (4) நாம் வீண் செலவு செய்யாமல் நமது பொருளைக் காப்பாற்ற வேண்டும். (5) நமது குடும்பத்திற்கு உதவி செய்யவேண்டும்.

(1) ஸாதுக்களிடத்தில் நாம் பிரியமான வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். (2) அவர்களுக்குப்பிரியமான செய்கைகளையே செய்யவேண்டும். (3) அவர்களைப்பற்றிப் பிரியமாய்நினைக்கவேண்டும் (4) அவர்களைக் கண்டவுடன் உபசரிக்கவேண்டும். (5) அவர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்யவேண்டும்.

(1) ஸாதுக்கள் நம்மைப் பாபத்திலிருந்து விலக்க வேண்டும். (2) புண்யத்தைச் செய்யும்படி போதிக்க வேண்டும். (3) ஸந்தேஹங்களை நீக்க

வேண்டும். (4) தர்மத்தை உபதேசிக்கவேண்டும் (5) எப்பொழுதும் விசுவாஸமாய் நடத்த வேண்டும்.

(1) பிரபுக்கள் சேவகர்களுடைய பலத்திற்குத் தகுந்தபடி வேலை கொடுக்கவேண்டும். (2) தகுந்த உணவையும் கூலியையும் கொடுக்கவேண்டும். (3) நோயால் வருந்தும்பொழுது சிகிச்சை செய்ய வேண்டும். (4) அடிக்கடி விடுமுறை நாள்களைக் கொடுக்க வேண்டும். (5) அபூர்வமான தின் பண்டங்கள் கிடைத்தால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

(1) வேலைக்காரர்கள் பிரபு எழுந்திருப்பதற்கு முன் தாங்கள் விழித்துக் கொள்ள வேண்டும். (2) அவர் நித்திரை செய்ததற்குப் பின் நித்திரை செய்ய வேண்டும். (3) கொடுத்ததைக் கொண்டு திருப்தியடைய வேண்டும்.(4) எப்பொழுதும் நிஜத்தையே ஸந்தோஷத்துடன் பேசவேண்டும். (5) அவனைப்பற்றிப் பிறரிடத்தில் புகழவேண்டும்

இப்படி ஆறு திக்குகளையும் பூஜிக்கிறவன் கிரஹஸ்த தர்மத்தைப் பூர்ணமாய் அனுஷ்டித்து நற்கதி யடைவா னென்றார்.

கேவலம் பிறப்பினாலேயே ஒருவன், இழிகுலத்தானாகமாட்டான். நடத்தையால் மாத்

திரம் ஒருவன் இழிகுலத்தானாகிறான் நடத்தையால் மாத்ரம் பிராஹ்மணனாகிறான் (வாஸல ஸூத்ரம்).

கோபம் குடி பிடிவாதம் மதத்வேஷம் வஞ்சனை பொறாமை தற்புகழ்ச்சி பரநிந்தை கர்வம் துஷ்ட ஸகவாஸம் இவையே ஒருவனை அசுத்தமாகச் செய்யும்; மாம்ஸத்தை புஜிப்பதால் மாத்ரம் ஒருவன் அசுத்தமாக மாட்டான். மீன் மாம்ஸம் முதலியவைகளைத் தின்னாததாலும் நிர்வாணமா யிருப்பதாலும் தலையை மொட்டையடித்துக் கொள்வதாலும் சடையை வளர்ப்பதாலும் புழுதியில் புரளுவதாலும் கிழிந்த வஸ்திரங்களைத் தரிப்பதாலும், அக்னிஹோத்ரம் முதலியவைகளைச் செய்வதாலும் அக்ஞானமும் மோஹமும் நீங்காது. வேதாத்யயனஞ் செய்வதாலும் புரோஹிதர்களுக்குத் தானஞ் செய்வதாலும், தேவதைகளைக் குறித்து யக்ஞஞ் செய்வதாலும், பஞ்சாக்னி மத்தியிலும் குளிரிலும் நின்று கொண்டு ஹடயோக முறைகளை அனுஷ்டிப்பதாலும் மாத்திரம் மனஸ்சுத்தமாகாது, மோஹம் விலகாது (ஆமகந்த ஸூத்ரம்) எழுந்திரு, உட்கார், வீணாய்த் தூங்குவதில் என்ன பயன்? துக்கமென்ற விஷந் தோய்த்த பாணங்க

ளால் துளைக்கப்பட்டுத் தபிக்கும் மனிதர்களுக்குத் தூக்கம் எப்படி வரும்? சோம்பலே அசுத்தம். அஜாக்கிரதையாக யிருப்பதே அசுத்தம். சிரத்தையையும் ஞானத்தையும் ஔஷதமாகக் கொண்டு, துக்கமென்ற பாணங்களைப் பிடுங்கி எறியுங்கள். ஒருவன் எண்ணிறந்த யாகங்களைச் செய்தாலும் கணக்கில்லாமல் தானங்களைச் செய்தாலும் ஒரு க்ஷணமாவது தன் மனத்தை தர்மத்தில் நாட்டினவனுக்கு ஈடாக மாட்டான்.

தானம் நான்கு வகை (1) கொடுக்கும் பொருள் அதிகமாயும் பயன் அல்பமாயு மிருப்பது. பிராணிஹிம்ஸை செய்து பிறர்க்கு விருந்துசெய்வதால் ஒருவன் ஸம்பாதிக்கும் பாபமும் அதிகம், புண்யமும் அல்பம். (2) கொடுக்கும் பொருள்களும் அல்பம் பலனும் அல்பம். தான் முதலில் கொடுக்க உத்தேசித்த பொருளில் ஒரு பாகத்தைப் பேராசையால் கொடுக்காமல் வைத்துக் கொள்வது (3) கொடுக்கும் பொருள் அல்பம், பயன் பெரிது, தனக்கு ஞானமும் ஜீவ காருண்யமும் வளர வேண்டுமென்ற எண்ணத்துடனும் ப்ரீதியுடனும் தன்னா லியன்றதைக் கொடுப்பதே (4) கொடுக்கும் பொருளும் அதிகம், பயனும் பெரிது. தனிகன்

தாராளமான மனதுடன் நன்றாய் யோஜித்துத் தன் செல்வத்தை ஸாதுக்களுக்கு உபசரிப்பதிலும் தர்மத்தைப் பரவச் செய்யும் காரியங்களிலேயே உபயோகப்படுத்துவிமே.

புத்தபகவான் அந்த வருஷத்தில் மழைக் காலத்தை வைகாலிக்கு ஸமீபத்திலுள்ள வேலுவ வென்ற ஸ்தலத்தில் கழிக்க நிச்சயித்தார். அப்பொழுது அவருக்குத் தேஹத்தில் ஒரு ரோகங் கண்டு கடுமையான உபத்ரவமுண்டாயிற்று. ஆனால் அதைச் சாந்தமாயும் நடு நிலை தவறாமலும் பொறுத்தார். அப்பொழுது "என் சிஷ்யர்களுக்கு இன்னும் சில விஷயங்களை உபதேசிக்காமலும், ஸங்கத்தினிடத்தில் சொல்லிக் கொள்ளாமலும், இந்தத் தேஹத்தை நான் விட்டுப் போவது ஸரியல்ல" வென்று தன் மனோபலத்தால் அந்த வியாதியை யடக்கி, ஸ்வஸ்தமாய் ஒரு நாள் மடத்திலிருந்து வெளியில் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது ஆனந்தரும் மற்ற சிஷ்யர்களும் வந்து அவரை நமஸ்கரித்து ஸமீபத்தில் உட்கார்ந்தார்கள்.

புத்த பகவான் அவர்களைப் பார்த்து "இந்த தேஹம் முதிர்ந்துவிட்டது. வெகுநாளாய் உழைத்துக் கொண்டு வருகிறது. இன்னும்

கொஞ்ச காலத்திற்குள் வேலைக்கு உபயோக மில்லாமற் போய்விடும். இதில் நான் பிரவேசித்து 80 வருஷங்களாகின்றன. பழைய ரதத்தை வெகு ஜாக்ரதையாய் நடத்தவேண்டியது போல், இந்தத் தேஹத்தை வெகுஜாக்ரதையாய் உபயோகித்துக் கொண்டுவருகிறேன். தேஹத்தை மறந்து த்யானத்தில் ஆழ்ந்திருக்கும் காலத்தில் மாத்திரமே இதற்கு ஸௌகமுண்டாகும். ஆகையால் நீங்கள் உங்களுக்கே தீபம் போல் விளங்க வேண்டும். நீங்கள் உங்களையே பற்றுக நம்பவேண்டும். உங்களைத் தவிர வேறொரு ஸஹாயத்தையும் நம்பவேண்டாம். ஸத்யத்தை தீபம் போல் கைவிடாமல் பற்ற வேண்டும். ஸத்யத்தாலேயே உங்களுக்கு மோக்ஷம் கிடைக்கும். உங்களைத் தவிர வேறொருவரும் உங்களுக்கு உதவி செய்வார்களென்றெண்ண வேண்டாம். இது எப்படியென்றால், ஒவ்வொரு பிக்ஷுவும் தன் தேஹத்திலிருக்கும் வரையில், அதின் ஆசைகளால் உண்டாகும் துக்கத்தை அடக்கிக் கவலையற்று, லோகோபகாரத்தில் ஈடுபட்டவனா யிருக்கவேண்டும். முயற்சி யுள்ளவனும், ஜாக்ரதை யுள்ளவனும், யோசனை யுள்ளவனும், ஸௌகதுக்கங்களை அனுபவிக்கும் பொழுது, அவைகளாலுண்டாகும் வருத்தத்தை

யடக்கவேண்டும். இப்படியே அவன் உண்ணும் பொழுதும், நினைக்கும் பொழுதும், பருகுகிற பொழுதும், அந்தச் செய்கைகளால் உண்டாகும் ஆசையால் தனக்கு யாதொரு கவலையும் நேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இப்படி இப்பொழுதும் நான் காலஞ்சென்ற பிறகும் யதார்த்தங்களையே பற்றி நம்பி, பிறருடைய ஸஹாயத்தை நம்பாமல் ஸத்யத்தைத் தீபமாயும் மோக்ஷமார்க்கமாயும் பாவிக்கிறார்களோ அவர்களே நிரந்தர ஆனந்தத்தையும் ஞானத்தையும் அடைவார்கள்.

அப்பொழுது பக்தரான ஆனந்தர் "ஸ்வாமி! லோகத்திலுள்ள ஜீவகோடிகளிடத்தில் கருணை வைத்து, அவர்களுடைய க்ஷேமத்தையும் சிரேயஸையும் நன்மையையும் ஸுகத்தையும் உத்தேசித்து, இன்னும் தாங்கள் லோகத்திலிருக்க வேண்டு"மென்று வேண்டினார். பகவான் "போதும். ததாகதரை ப்ரார்த்திக்காதே"யென்றார். அப்படியும் ஆனந்தர் இரண்டாவது தடவை கேட்டதற்கு அதே பதில் கிடைத்தது. மறுபடியும் ஆனந்தர் மூன்றாந் தடவை கேட்டவுடன் பகவான் "ஆனந்தா! உனக்குச் சிரத்தையுண்டா?" ஆனந்தர் "ஸ்வாமி! உண்டு." பகவான் "வாஸ்தவ

மாய் உனக்கு சிரத்தையுண்டா?" ஆனந்தர் கண்களில் நீர் ததும்ப, துக்கத்தால் மனம் கொதிக்க "ஸ்வாமி! எனக்கு சிரத்தையுண்டு." பகவான் "ததாகதருடைய எல்லையற்ற ஞானத்தில் பூர்ண நம்பிக்கையிருந்தால் ஏன் அவரை ஒரு தடவை இரண்டு தடவை மூன்று தடவை வீணாய்ச் சிரமப் படுத்துகிறாய்? இவ்வுலகத்திலுள்ள பதார்த்தங்கள் யாவும், எமக்கு எவ்வளவு அருமையாயிருந்தாலும், ஒரு காலத்தில் அவைகளை விட்டுப் பிரிய வேண்டியது அவசியமென்றும் நாசமாவதாமென்றும் நான் உனக்கு முன்பு சொல்லவில்லையா? உண்டான பதார்த்தம் யாவும் நிச்சயமாய் அழிய வேண்டியதல்லவா? அப்படியிருக்க, நான் இந்தத் தேஹத்தை எப்பொழுதும் எப்படி வைத்துக் கொள்ளமுடியும்? ஆகையால் இந்த லௌகிக வாழ்க்கையையும் தேஹத்தையும் ததாகதர் ஒழித்துவிட்டார். ஆகையால் ஆனந்த! நீ பூஜாமண்டபத்தில் வைசாலிக்கு அருகிலுள்ள ஸகல பிக்ஷுக்களையும் ஒன்று கூட்டக்கடவா" யென்றார்.

அப்படியே செய்தபிறகு பகவான் அவர்களைப் பார்த்து "ஸஹோதரர்களே! உங்களுக்கு ஸத்யம் நன்றாய் உபதேசிக்கப் பட்டிருக்கிறது.

நீங்கள் அதைப் பூர்ணமாய் அறிந்திருக்கிறீர்கள். அதையே அப்யாஸஞ் செய்யுங்கள். தியானஞ் செய்யுங்கள். லோகத்தில் பரவச் செய்யுங்கள். அதினால் சத்தியமான மதம் நீடித்திருக்கும். தேவ கோடிகளின் க்ஷேமத்திற்கும் காரணமாகும். நக்ஷத்ரங்களின் கதியாலும் கிரஹங்களின் பாறு தலாலும் சகுனங்களாலும் சுபாசுப பலங்களைச் சொல்வது உங்களுக்குத் தகாத காரியம். கட்டுக் காவலில்லாமல் தன் மனதை இஷ்டப்படி போகும்படி விடுகிறவன் ஒருகாலும் நிர்வாண ஸுகத்தை யடையமாட்டான். ஆகையால் மனதையடக்கி, லோக வியவஹாரங்களிலிருந்து ஒழிந்து, சாந்தியை அடையத் தேட வேண்டும். பசிதாகத்தை நீக்குவதற்கு வேண்டிய வரையிலேயே அன்ன பானங்களைத் தேட வேண்டும். புஷ்பத்திலிருந்து தேனைக் குடித்தாலும் அதின் வாஸனையையும் ரூபத்தையும் கெடுக்காமலிருக்கும் வண்டைப் போல் நீங்கள் உங்களுடைய தேஹ போஷணைக்கு வேண்டிய வரையில் மாத்ரம் லோக வியவஹாரங்களில் கவனிக்க வேண்டும். நான்கு பரம தத்வங்களை நன்றாய் அறிந்து கிரஹிக்காததால் நாம் இவ்வளவு காலம் வழி தவறி ஸம்ஸாரமென்ற தொல்லையான

மார்க்கத்தில் உழன்றுவந்தோம். நான் உங்களுக்கு உபதேசித்திருக்கும் தியானங்களை அனுஷ்டியுங்கள். பாபத்தில் மனம் செல்லாதபடி உங்களுடைய பூர்ண பலத்தையும் சக்தியையும் உபயோகித்துப் போர் புரியுங்கள். ஸாதுக்களின் மார்க்கத்தையே தவறாது பற்றுங்கள். நன்னடத்தை நல்லொழுக்கம் தன்னடக்கம் முதலிய நற்குணங்களை ஸம்பாதித்து, நிர்ப்பயத்தை யடையுங்கள். உங்களுடைய ஞானக்கண் முதலிய இந்திரியங்கள் கூர்மையாயிருக்கட்டும். பலவிதமான ஞான பூமியில் நீங்கள் ஸஞ்சரிக்கும் பொழுது நிர்வாண பதவியைக் கொடுக்கும் ஆரிய அஷ்டாங்க மார்க்கம் உங்களுக்குப் புலப்படும். ததாகதரின் காலம் அதி சீக்கிரத்தில் முடிந்துவிடும். ஆகையால் நாம ரூபத்துடன் விளங்கும் ஸகல பதார்த்தங்களும் ஏதோ ஒரு காலத்தில் உண்டானவை யாதலால் முதிர்ந்து மறுபடியும் கலைந்து பூர்வ ஸ்திதியை யடையும். ஆகையால் எது நித்யமோ அதையே தேடுங்கள். விடா முயற்சியுடனும் ஊக்கத்துடன் மோக்ஷ ஸாதனத்தை அனுஷ்டியுங்களென்றார்."

பிறகு பாவாவென்ற விடத்திற்குப் போய் அங்கே சண்டனென்ற கம்மாளனுடைய வீட்டில்

பிக்ஷை செய்தார். அதற்குப் பிறகு அவருக்கு ஓர் கொடிய நோய் கண்டு தாங்கமுடியாத உபத்ரவ முண்டாயிற்று. ஆயினும் அதை லக்ஷியஞ் செய்யாமல் சாந்தமாய்ப் பொறுத்துக்கொண்டிருந்தார். பிறகு "ஆனந்தா! நாம் குசி நகரத்திற்குப் போவோம், வா" வென்றார். போகும் வழியில் அவர் களைத்து ஓர் மரத்தடியில் உட்கார்ந்து "ஆனந்தா! என் காஷாயத்தை மடித்துப் போடுவாயா? களைப்பு அதிகமாயிருக்கிறது. சற்று சிரம பரிஹாரம் செய்து கொள்ளுகிறேன்" என்றார். ஆனந்தர் அப்படியே செய்யப் பகவான், அதின் மேல் உட்கார்ந்து "ஆனந்த! தாஹத்திற்கு நீர்கொண்டுவா" வென்றார். ஆனந்தர் "ஸ்வாமி! இப்பொழுது தான் அநேக வண்டிகள் அந்தத் துறையின் வழியாய்ப் போயின. ஜலம் கலங்கிச் சேறாயிருக்கிறது. கொஞ்ச தூரத்திலிருக்கும் நதிக்குப் போனால் சுத்தமாயும் மதுரமாயும் குளிர்ந்ததாயுமிருக்கும் ஜலம் கிடைக்கு" மென்றார், இரண்டாவது தடவை பகவான் அவரைக் கட்டளையிட, அதற்கும் அப்படியே ஆனந்தர் பதில் சொன்னார். அதைக் கேட்காதவர் போல் மூன்றாவது தடவை "ஆனந்தா! தாஹம் வர வர அதிகமாகிறது. நீர் கொண்டுவா" வென, ஆனந்தர் கமண்டலுவை எடுத்துக்கொண்டு வாய்க்காலுக்குப் போய்ப் பார்

க்கையில் ஜலம் தெளிவாயும் பிரகாசமாயும் சுத்தமாயும் குளிர்ந்ததாயுமிருக்கக்கண்டு, ததாகதருடைய திவ்ய சக்தியை மெச்சி, ஜலம் கொண்டுவந்து கொடுத்தார். அப்பொழுது அங்கே மல்லஜாதியாரைச்சேர்ந்த புக்கஸனென்றவோர் இழிகுலத்தான் அவ்வழியே வந்து பகவானைக் கண்டு நமஸ்கரித்து உட்கார்ந்தான். பகவான் அவனுக்குத் தகுந்தபடி உபதேசித்து, அவனுடைய மனதைத் திருப்தி செய்து ஸந்தோஷப்படுத்தினார். அவனால் கொடுக்கப்பட்ட விலையுயர்ந்த உடுப்பை ஆனந்தர் ததாகதரைத் தரிக்கச் செய்து, அவருடைய தேஹம் புகையற்ற நெருப்பைப் போல் ஜ்வலிப்பதைக்கண்டு "ஸ்வாமி! தங்களுடைய தேஹகாந்தியாலும் தேஜஸாலும் இந்தத் தங்கத்தால் அலங்கரிக்கரிக்கப்பட்ட உடுப்பு மழுங்கியிருக்கிறது. இதென்ன ஆச்சர்ய" மென்றார். அதற்குப் பகவான் "ஆனந்த! ததாகதருடைய தேஹம் இவ்விதமாய்ப் பிரகாசிக்கும் ஸமயம் இரண்டே ததாகதர் ஸம்பூர்ண ஞானத்தை அடைந்த ராத்ரி ஒன்று; அவர் நிருபாதி சேஷமான முக்தியை யடையும் தினமொன்று" மென்றார். பிறகு தனக்கு அன்ன மிட்ட சண்டனென்ற கம்மாளனையாராவது "வீட்டில் ததாகதரை கடைசியாய் போஜனம் செய்தார். அதினால் அவருக்கு ப்ரணம் நேர்ந்த

5

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090

தெ''ன்று தூஷிப்பார்கள். ஆகையால் நீ அவனிடத்திற்குச் சென்று ததாகதர் உன்வீட்டில் கடைசியாய் போஜனஞ்செய்தது உனக்கு மஹா ஸுக்கிர்தம். ததாகதர் ஸம்பூர்ண ஞானத்தையடைந்தபிறகு முதல் முதல் அங்கீகரித்தும் ஆஹாரமும் நிருபாதி சேஷமாய் அவர் மனுஷ்ய லோகத்திலிருந்து போகும் ஸமயத்தில் அங்கீகரிக்கும் ஆஹாரமும் ஒரே புண்யத்தையும் சிரேயஸையும் கொடுக்கும். சண்டன் பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மம் அவனுக்கு தீர்க்கமான ஆயுளையும் மேலான பிறவியையும் ஐசுவரியத்தையும் கீர்த்தியையும் செல்வாக்கையும் உத்தம லோகத்தையும் கொடுக்கு மெ''ன்று ததாகதர் உனக்குச் சொல்லச் சொன்னார். ஆகையால் நீ கொஞ்சங் கூட பச்சாத்தாபமடையக் கூடாது, வருத்தப்படக்கூடா ''தென்று அவனுக்கு வற்புறுத்தவேண்டும்.'' என்றார்.

பிறகு தான் தேஹத்தை விடவேண்டியகாலம் வந்ததென் றறிந்து பிக்ஷுக்களுடன் ஹிரண்யவதி நதிக்கு அக்கரையில் குசிநகரத்தில் உபாவர்த்தன மென்ற மல்லர்களுடைய ஸாலமரத் தோட்டிற்குச் சென்று ''ஆனந்த! இவ்விரண்டு ஸால விருக்ஷங்களுக்குநடுவில்கீழே தெற்குமுகமாய் என் காஷாயத்தை விரி. சிரமமாயிருக்கிறது. சற்றுப் படுத்துக் கொள்ளுகிறே''னென்றார். ஆனந்தர்

அப்படியே செய்யப் புத்தபகவான் அதில் படுத்துக்கொண்டு, "ததாகதருக்கு மிகவும் பிரியமான மரியாதையைச் செய்கிறவர்கள் யார் தெரியுமா? தான் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவற இயன்றபடி செய்து, என் உபதேசங்களை மனதில் நிறுத்தி, அவைகளின்படி எப்பொழுதும் நடந்து தர்மத்தையே நியமமாய்க் கொள்ளுகிறவர்களே அவர்கள் புருஷனானாலும் ஸ்திரீயானாலும எந்த ஜாதியைச் சேர்ந்தவனானாலும் எந்த நிலைமையிலிருப்பவனானாலும் ஸரி. ஆகையால் ஆனந்தா! நீங்கள் உங்களுடைய கடமைகளை ஒன்று பாக்கியில்லாமல் இயன்றவரையில் நிறைவேற்றி என் உபதேசங்களைக் குறைவற அனுஷ்டிக்கக் கடவீர்கள். இதே நீங்கள் செய்யக்கூடிய குருபூஜை" யென்றார்.

அப்பொழுது ஆனந்தர் துக்கந்தாங்காமல் மடத்திற்குள் சென்று கதவு நிலையின் மேல் சாய்ந்து கொண்டு "ஐயோ! நான் ஞானத்தின் முதலாவது படியைக் கூட இன்னும் தாண்டவில்லையே. என்னிடத்தில் பரம ப்ரீதியையும் கிருபையையும் வைத்திருந்த என் ஸத்குரு என்னை விட்டுப்போய் விடுகிறாரே, என்ன செய்வே" னென்று கண்ணீர் பெருக அழுதுகொண்டிருந்தார். அப்பொழுது

பகவான் "பிக்ஷுக்களே! ஆனந்தன் எங்கே" யென்றார். ஆனந்தர் அதைக் கேட்டு ஸமீபத்தில் வந்து "ஸ்வாமி! லோகமெங்கும் ஞானம் நசித்து அக்ஞானமென்ற இருள் பரவிற்று; ஞானப்ரகாசமின்றி ஸகல ஜீவகோடிகளும் தடுமாறிக் கொண்டிருந்தன. அப்பொழுது ததாகதர் ஞானதீபத்தை ஏற்றி ஜீவன்களைக் காப்பாற்றினார். அவர்கள் உத்தமகதியை அடைவதற்கு முந்தி அந்தத்தீபம் அணைந்து விடுமே" யென்றார். பகவான் "போதும். ஆனந்தா! நீ கவலைப்படாதே. துக்கத்திற்கிடங் கொடுக்காதே. லோகத்தில் நாம் பிரியம் வைக்கும் ஸகல பதார்த்தங்களும் ஏதாவது ஒரு காலத்தில் அழியும். அல்லது நாம் அவைகளை விட்டுப் பிரியவேண்டி வருமென்று உனக்குப் பல தடவை சொல்லி யிருக்கிறே னல்லவா? இந்த மாம்ஸ மயமான தேஹம் போனாலென்ன? நான் உபதேசித்த தர்மம் அழியாதல்லவா? என் உத்தேசத்தை நிறைவேற்றி விட்டேன். என் காரியம் முடிந்து விட்டது. ஆகையால் இனி நான் சற்று சிரம பரிஹாரம் செய்து கொள்ளலாமென்று நிச்சயத்திருக்கிறேன். நீ வெகுகாலமாய் என்னிடத்தில் பக்தியுடனும், பிரீதியுடனும் சிசுருஷை செய்து கொண்டிருக்கிறாய். எப்பொழுது ப்ரியமான வார்த்தைகளையே பேசுகிறாய். பக்தியுடன்

என்னையே த்யானஞ் செய்கிறாய். நீ செய்வது வெகு சிலாக்யமான காரியமே. இப்படியே சிரத்தையுடன் நடந்துவா. மஹாபாபங்களும் காமக்ரோதமும் அஹங்காரமும் மோஹமும் அக்ஞானமும் உன்னை அணுகாதே" என்றார்.

அப்பொழுது ஆனந்தர் கண்களைத் துடைத்துக் கொண்டு 'தாங்கள் எங்களை விட்டுப்போனால் எங்களுக்குபதேசிப்பவர் யாரோ" என்றார். புத்த பகவான் "இந்த லோகத்தில் இதுவரையில் எவ்வளவோ புத்தர்கள் வந்திருக்கிறார்கள். எனக்குப் பின் எவ்வளவோ புத்தர்கள் வருவார்கள். தகுந்த காலத்தில் ஓர் மஹா புருஷன் ஞானத்திலும் பக்தியிலும் கருணையிலும் சக்தியிலும் சிறந்தவராய், ஸகல லோகங்களுக்கும் குருவாய் அவதரிப்பார். என்னைப்போல் அவரும் ஸநாதனமான தர்மத்தை உபதேசிப்பார். அதைக்கேட்டு எண்ணிறந்த ஜீவன்கள் நற்கதியடையு" மென்றார். ஆனந்தர் "ஸ்வாமி! அவரை நாங்கள் எப்படிக் கண்டு கொள்வோம்?" புத்த பகவான் "கருணையே உருவெடுத்து வந்ததென்ற பொருளுள்ள மைத்ரேய புத்தரென்று அவருக்குப் பெயரெ" ன்றார்.

பிறகு மல்ல ஜாதியார்கள் ஆண் பெண் குழந்தைகளுடன் அவரை வந்து தரிசித்

தார்கள். பகவான் "நீங்கள் என்னை வந்து பார்ப்பது மாத்ரம் போதாது. மோக்ஷ மார்க்கத்தைத் தேடிக் கண்டு பிடித்து, விடாமுயற்சியுடன் அதில் நடக்கவேண்டும். என் உபதேசத்தை மறக்காமல் உறுதியான மனதுடன் மோக்ஷ வழியை அநுஷ்டித்து வாருங்கள். உத்தமமான ஔஷதங்களால் வியாதி நீங்கிவிடும். அவைகளைச் செய்து கொடுக்கும் வைத்யனை நோயாளி பார்க்கவேண்டுமென்பது அவசியமில்லை. என்னைத் தரிசிப்பவர்களும் என்னுடன் எப்பொழுது மிருப்பவர்களும் என் உபதேசத்தை எப்பொழுதும் கேட்பவர்களும் அக்காரணத்தாலேயே நன்மை யடைவார்களென்பது வீண் எண்ணம். இவ்வாறு செய்யும் என் உபதேசத்தை மனதில் வைத்து இயன்றவரையில் அனுஷ்டிக்காதவன், என்னை தரிசித்தவனல்ல என்னுடன் இருந்தவனல்ல ஆனால் தர்மத்தின்படி எப்பொழுதும் நடக்க முயல்கிறவன் என்னைத் தரிசிக்காவிட்டாலும், என் வார்த்தைகளைக் கேட்காவிட்டாலும், எவ்வளவு தூரத்திலிருந்தாலும் நான் எப்பொழுதும் அவனிடத்திலேயே யிருக்கிறேன்" னென்றார்.

அப்பொழுது அங்கே ஸுபத்ரனென்ற பிராஹ்மண ஸந்யாஸி வந்து "நான் கௌதமரைப் பார்க்க வேண்டும், அவரிடத்தில் சில

விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டு" மென்றான். ஆனந்தர் முதலிய பிக்ஷுக்கள் இது ஸமயமல்ல வென்று அவனைத் தடுத்தார்கள். புத்த பகவான் அதைக் கேட்டு "ஆனந்தா! ஸுபத்ரனை என்னிடத்தில் வரச்சொல். நிஜமான சிரத்தையுடன் அவன் வருகிறான். என் வார்த்தைகள் அவனுக்கு மிகுந்த பிரயோஜனத்தைக் கொடுக்கு" மென்றார். அப்படியே ஸுபத்ரன் அவரிடத்தில் வந்து, தன் ஸந்தேகங்களைத் தெரிவித்து, அவருடைய உபதேசங்களைக் கேட்டுப், பக்தி மேலிட்டு ஞானோதயமாய், அவரைச் சரணமடைந்தான்.

பிறகு பகவான் "நான் உங்களை விட்டுப்போன பிறகு என்னுடைய உபதேசமும் என்னால் ஏற்படுத்தப்பட்ட ஸங்கமுமே உங்களுக்குக் குரு. இந்தத் தேஹம் போய் விட்டாலும் ததாகதனென்ற நான் எப்பொழுது மிருக்கிறேனல்லவா? இப்பொழுது உங்களில் யாருக்காவது மோக்ஷ மார்க்கம் தர்ம தத்வம் புத்தர் முதலிய விஷயங்களைப்பற்றி இன்னும் ஸந்தேகமாவது விபரீத புத்தியாவது இருக்கலாம். ஆகையால் அவைகளைப்பற்றித் தாராளமாய் இப்பொழுதே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். "நமது ஸத்குரு நேருக்கு நேரா யிருந்த பொழுது, இந்த விஷயத்தைக் கேட்காமல் இருந்து விட்டோமே" என்று

வருந்தக் கூடாதே'' என்றார். பிக்ஷுகள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பகவான் "உங்களில் ஒவ்வொருவருக்கும் சிரத்தையும் ஞானமும் சக்தியும் பூர்ணமாயிருக்கிறது. இந்த லோகத்திலுள்ள ஜீவகோடிகளுக்குள் நானே அக்ஞானமென்ற வலையைத் தெறித்துச், சக்தி ஞானம் பக்திஐச்வர்யம் முதலிய அனந்த கல்யாண குணங்களில் பரிபூரணனாய், ஒப்பற்ற புத்த பதவியை அடைந்தவன். எனக்கு முன்பு வந்த புத்தர்கள் வேறு லோகங்களிலிருந்து வந்தவர்கள்; ஆகையால் நானே முதலாவது புத்தன். ஆனால் ஸர்வக்ஞான நான் சொன்னேனென்ற காரணத்தால் மாத்திரம் என் உபதேசங்களை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?'' பிக்ஷுகள் "இல்லை: நாங்களே பார்த்துப் பரீக்ஷித்துந் தியானித்து ஸாக்ஷாத்கரித்த காரணத்தால் மாத்ரம் அவைகளை ஒப்புக்கொண்டிருக்கிறோம்'' மென்றார்கள்.

அப்போது புத்த பகவான் எல்லோரையும் அழைத்துத், தன்னையே பார்த்துக் கொண்டிருக்கச் செய்து, தன்னிடத்திலேயே மனஸையும் இந்திரியங்களையும் ஒரே நிலையாய் வைக்கச் செய்து "ஸஹோதரர்களே! பாருங்கள் இந்த ப்ரபஞ்சத்திலுள்ள நாம ரூப ஸஹித மான ஸகல ப

தீர்த்தங்களிலும் அழிவும் நாசமும் ஸ்வாபாவமாய்க் குடிகொண்டிருக்கிறது. ஆனால் ஸத்யம் ஒன்றே எக்காலத்திலும் நிலைநிற்கும். சிரத்தையுடன் உங்களுடைய முந்திமார்க்கத்தை நீங்களே தேடவேண்டும்'' என்றார். ததாகதருடைய கடைசி வார்த்தை இது.

இப்படி உபதேசித்த ததாகதர் ஆழ்ந்த நிர்விகல்ப ஸமாதியில் பிரவேசித்து தியானத்தின் நான்கு படிகளையும் தாண்டி அறுபாதி சேஷப் பர நிர்வாண தசையை அடைந்தார். அன்று கலியுகம் 2542ம் வருஷம் (560 B.C, வைகாசி பூர்ண பௌர்ணமி. அப்பொழுது பயங்கரமான பூகம்பம் உண்டாயிற்று. ஆகாயத்திலிருந்து மின்னல்களும் இடியும் எல்லோருடைய மனதையும் நடுங்கச் செய்தன. அப்பொழுது துக்கந் தாங்காமல் வாய்விட்டழுத சில பிக்ஷுகளை அனிருத்தரும் ஆனந்தரும் ஸமாதானஞ் செய்து அன்றிரவு முழுவதும் அவர்களுக்கு நல்லுபதேசஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

மறுநாள் குசி நகரத்து மல்லஜாதியார் எல்லோரும் அங்கே வந்து, வாத்தியகோஷங்களுடனும் கீதங்களுடனும் மாலைகளால் அவ்விடத்தை அலங்கரித்து தூபதீபங்களால் பரிமளிக்கச் செய்து,

சந்தனம் அகில் முதலிய வாசனைக் கட்டைகளால் சிதை யடுக்கி அதில் புத்தபகவானுடைய தேஹத்தை வைத்து ராஜாதி ராஜனுக்கு நடத்த வேண்டிய சகல மரியாதைகளுடனும் தீமூட்டினார்கள். அவருடைய தேஹ சேஷமும் பஸ்மமும் எட்டு பாகங்களாய்ப் பிரிக்கப்பட்டு, எட்டுத் திக்குகளிலுமுள்ள ராஜ்யங்களால் கொண்டு போய்ப் பூஜிக்கப்பட்டன. அவைகளில் ஒரு பாகம் அவ்விடத்திலுள்ள மல்ல ஜாதியாரால் கட்டப்பட்ட ஆலயத்தில் வைக்கப்பட்டது.

அப்பொழுது தேவதத்தரென்ற சிஷ்யர் அங்குள்ளவர்களைப் பார்த்து, ஸகோதரர்களே! புத்தபகவானுடைய பிராகிருத தேஹம் அழிந்து விட்டது. ஆனால் அவரால் நமக்கு உபதேசிக்கப்பட்ட தர்மங்கள் நமது மனதில் ஊன்றி, ஸகல பாபத்திலிருந்தும் நம்மை ரக்ஷித்திருக்கின்றன. ஆகையால் நாம் லோகத்திலுள்ள ஸகல தேசங்களுக்கும் போய், நமது ஸத்குருவைப்போல் கருணையும் பொறுமையும் இன்சொல்லும் பொருந்தினவர்களாய், எல்லா ஜீவகோடிகளுக்கும் நான்கு பரமதத்வங்களையும் அஷ்டாங்க தர்ம மார்க்கத்தையும் உபதேசிப்போம். எல்லோரும் புத்தரையும் தர்மத்தையும் ஸங்கத்

தையும் சரணமடைந்து துக்கக் கடலைத் தாண்டி, நிர்வாண லோகத்தை அடையட்டு”மென்றார்.

### சில ஆக்ஷேபங்கள்.

“ஸன்மார்க்கத்தில் நடக்க முயன்று மோக்ஷத்தை அடைய யத்னம் செய்த தைத்யர்களையும் அஸுரர்களையும் மோஹஞ்செய்து, வேத விருத்தமான தர்மங்களையும் ஆசாரங்களையும் அவர்களுக்கு உபதேசித்து அவர்களை ஸன்மார்க்கத்திலிருந்து விலக்கி, நரகத்தில் தள்ளுவதற்காகவே மஹா விஷ்ணு கௌதம புத்தராய் அவதரித்தாரென்று புராணங்களில் காணப்படுகிறது.

“ஸமாதானம் (1) இது பிராமணர்களுடைய மதத் த்வேஷத்தாலும் பொறாமையாலும் புத்தருடைய ஆக்ஷேபங்களுக்குப் பதில் சொல்லமுடியாமல் விதண்டாவாதமாய் புராணங்களில் கல்பனையாய் எழுதி ச்லோகங்களென்பதில் கொஞ்சமேனும் ஸந்தேகமில்லை. இந்தக் கொள்கையை நமது தேசத்தில் பண்டிதரென்று பெயர் கொண்டவர்களாலும் பாமரர்களாலும் ஆதரிக்கப்படுகிறது. இதைப் போன்ற அக்ரமம் கிடையாது. பரம கருணமூர்த்தியும் ராக த்வேஷங்களற்றவரும் பக்ஷபாத மில்லாதவருமான ஸர்வ லோக

பிதாவிற்கு ஒரு வகுப்பினரிடத்தில் காரணமில்லாத ப்ரீதியும் வேறொரு வகுப்பினரிடத்தில் காரணமில்லாத த்வேஷமும் இருக்க நியாயமில்லை. இதற்கு "நான் ஸகல பூதங்களிடத்திலும் ஸமமாய் விளங்குகிறேன். என்னால் த்வேஷிக்கப்படுகிறவன் ஒருவனுமில்லை. எனக்கு ப்ரியனும் ஒருவனுமில்லை. யார் என்னைப் பக்தியுடன் பூஜிக்கிறார்களோ அவர்களிடத்தில் நான் வஸிக்கிறேன். அவர்களும் என்னிடத்திலேயே வஸிக்கிறார்களென்ற கீதாவாக்யமே ப்ரமாணம். ஸகல ஜீவகோடிகளும் அக்ஞானத்தி லிருந்து தப்பி, ஞானோதயம் பெற்று துன்மார்க்கத்தை விட்டு, ஸன்மார்க்கத்தில் நடந்து, தன் திருவடிகளை அடைய வேண்டுமென்பதே பகவானுடைய கோறிக்கை; அவருடைய காரியம்; அதற்காகவே அவர் அடிக்கடி அவதரிக்கிறார். வேதசாஸ்திரங்களையும் அவைகளை அனுஷ்டித்துக் காட்டுவதற்கு மஹான்களையும் நமக்கு அனுக்ரஹிக்கிறார். இதே கார்யத்தைச் செய்ய முயன்ற அஸுரர்களிடத்தில் அவருக்குக் கோபமுண்டாகுமா? த்வேஷமுண்டாகுமா? அவர்களைத் கெடுப்பாரா? ஸன்மார்க்கத்தில் நடக்கிறவர்களைக் கலைத்துப், பொய்யான மதத்தையும் பாபச் செயல்களையும் உபதேசித்துக் கொடுக்கும் மனுஷ்யனைப்

பரம அயோக்யனென்றும் மஹாபாபியென்றும் சொல்லத் தடையென்ன? ஈசுவரனென்பவனை அப்படியிருந்துவிட்டால் அவனை என்னவென்று சொல்ல முடியும்? அவ்விதமான ஈசுவரன் ஒருவருக்கும் வேண்டாம்.

மேலும், ஈசுவரனுக்குப் பக்ஷபாதமும் க்ருகஸ்வ பாவமும் இல்லையென்று ப்ரஹ்மஸூத்ரம் முறையிடவில்லையா?

மேலும் "ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களைச்சிக்ஷிப்பதற்கும் தர்மத்தைத் ஸ்தாபிப்பதற்குமே நான் பூமியில் அவதரிக்கிறேன்'' என்று அவரே கீதையில் சொல்லியிருக்கிறார். ஸன்மார்க்கத்தில் நடப்பவர்களை மோசஞ்செய்து அழிப்பதற்காக அவதரிக்கிறேனென்று அதில் ஏன் சொல்லவில்லை

மேலும் ஸ்ரீமத்வாச்சாரியருடைய பிரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் சங்கராசாரியரைப்பற்றிச் சொல்லிருக்கும்விஷயத்தைக் கவனித்தால் பிராஹ்மணர்கள் மதத்வேஷத்தால் இப்படிச் செய்வது வழக்கமென்றே தெரிகிறது. அதாவது த்வைத மதத்தை அனுஷ்டித்து எல்லோரும் முக்தியடைய ஆரம்பித்தார்கள். அதைக் கண்டு மஹாவிஷ்ணு

கலையைக் கொண்டு, ருத்ரனைப்பார்த்து "இப்படியா னல்லோகத்தில் மனுஷ்யர்களே இல்லாமற்போகும் நரகங்களுக்கும் யமனுக்கும் யமகிங்கரர்களுக்கும் வேதசாஸ்திரங்களுக்கும் வேலையில்லாமற்போகும் ஆகையால் நீ லோகத்தில் சங்கராசாரியராய் அவதாரஞ்செய்து, அத்வைதமென்ற மோஹ சாஸ்திரத்தை எல்லோர்க்கும் உபதேசித்து த்வைத மதத்திலிருந்து திருப்பி மோக்ஷத்தை யடையாமல் செய்யக் கடவாயென்று சொன்னதாயும் இந்தச் சுலோகம் காந்தபுராணத்திலிருப்பதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், மணிமஞ்சரி யென்ற கிரந்தத்தில் மணிமானென்ற அஸுரனே சங்கரராய்ப் பிறந்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் கௌதமபுத்தரைப்பற்றி நிஜமான கருத்து நமது முன்னோர்களுக்கு இருந்ததென்பதற்கும், இந்தக் கல்பனையான சுலோகங்கள் A. D. 13-வது நூற்றாண்டிற்குப் பிறகே சேர்க்கப்பட்டன வென்பதற்கும் அடியிற் கண்ட ஒரே காரணம் போதும்:—

வங்காளத்தில் ஆண்டு வந்த லக்ஷ்மணஸேனனுடைய காலத்திலிருந்த ஜய தேவஸ்வாமி இயற்றின கீத கோவிந்தத்தில் முதலாவது அஷ்டபதி

யில், விஷ்ணுவின் பத்து அவதாரங்களை வர்ணிக்கும் பொழுது "கேசவா! கௌதமபுத்தருடைய சரீரத்தை எடுத்தவரே! ஜயவிஜயிபவ! வேதத்தில் சொன்னபடி நடக்கும் யாகயக்ஞங்களில் க்ரூரமாய் எண்ணிறந்த பிராணிகள் கொல்லப்படும் கோரத்தை ஸஹிக்காமல், கருணைக் கடல் போன்ற மனதையுடையவராய், அந்த வேதவாக்யங்களையும் கண்மூடித்தனமாய் அவைகளின் நிஜதாத்பர்யத்தை அறியாமல் அவைகளை அனுஷ்டிப்பவர்களையும் நிந்திக்கிறீர்" என்று காணப்படுகிறது. நிஜமான ஞானமும் ஆசாரமும் யோக்யதையுமற்ற ப்ராஹ்மணர்கள், மற்ற வர்ணத்தாரை உபத்ரவிப்பதையும், பிராணி ஹிம்ஸை செய்வதையும், மற்றயார்க்கும் மோக்ஷம் கிடைக்காதென்று வாதிப்பதையும் கண்டு, கர்ம காண்டமே பெரிதென்று உபதேசித்து அனுஷ்டித்து, ஈசுவரனையும், வேத சாஸ்திரங்களையும் பிராஹ்மணர்களையும் நம்புவதே போதும், கர்மங்களைக் குறைவற அனுஷ்டிப்பதே போதுமென்று வாதித்து, நன்னடத்தை ஜீவகாருண்யம் பரோபகாரம் தன்னடக்கம், நமது பாரத்தைப் பிறருடைய தலையில் வைக்காமல் நாமே முடிவு வரையில் முயற்சி செய்ய வேண்டும்; நம்மைத் திரிமூர்த்திகளும் காப்

பாற்ற முடியாது; தடுக்கவும் முடியாதென்ற பரமதத்வத்தை மறந்து மறைத்து மறுத்து, நமது ஆர்யாவர்த்தம் முழுவதிலும் அஞ்ஞானத்தையும் பாபத்தையும் மூட பக்தியையும் க்ரூரச் செயல்களையும் பரவச் செய்த பிராஹ்மணர்களை எதிர்த்து, அவர்களுடைய மதத்திலுள்ள ஆபாஸங்களையும் அக்ரமங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டிச், சத்தமான நடத்தையையும் கருணையும் பும் ஹிருதயத்தையும் பரோபகாரத்தையும் தன்னிடத்தில் எல்லையற்ற நம்பிக்கையையும் பரம தத்வங்களென்று உபதேசித்து, ப்ராஹ்மணர்களின் கொடுங்கோலையும் வேஷங்களையும் காலாக்னி முன் பஞ்சுப் பொதி போல் பறக்கடித்த, மஹா புருஷனை புத்த பகவானுடைய உபதேசத்தைக் கண்டிக்க முடியாமல், அவருடைய ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானஞ் சொல்லமுடியாமல், கையாலாகாத பிராஹ்மண அதமர்கள், அவர் மஹா விஷ்ணுவின் அவதாரமென்பதை* மறுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு, அந்த அவதாரத்திற்கு விசித்ரமான ஓர் காரணத்தை ஏற்படுத்தி, லோகத்தில் மஹா பாபிகளைக் காட்டிலும் துஷ்டர்களைக் காட்டிலும் கொடியவர்களைக் காட்டி

ஆம் இன்னும் கீழ்க்கடையாய்த், தங்களு டைய த்ரிமூர்த்திகளிலொருவரையும் லோகரக்ஷ கருமான தயாநிதியைத் தங்களாலானவரையில் அவமானப்படுத்தி விட்டார்கள்.

கௌதமபுத்தர் ஆர்ய வர்த்தத்தில் பிறந் தவர்; பிராஹ்மண குருக்களால் வேதசாஸ்திரங் களில் உபதேசம் பெற்றவர். அவருடைய சிஷ்யர்களில் பெரும்பாலார் பிராமணப் பண்டிதர் கள். மோக்ஷத்தையும் மோக்ஷ மார்க்கத்தையும் மோக்ஷ ஸாதனங்களையும் தங்களுக் கென்றே வைத்துக் கொண்டு, தாங்கள் தயவுசெய்து கொடுத்தவர்களுக்கே கிடைக்குமென்று, அதின் நிஜஸ்வ ரூபத்தை அறியாமல், வீண்பெருமை பாராட்டிக் கொண்டு, பிறரை அதிகாரஞ் ஹிம்ஸித்த பிராமணர்களை எதிர்த்து, ஆண் பெண் அரசன் கூலியாள் தனிகன் பிச்சைக்காரன் பண்டி தன் பாமரன் கிழவன் சிறுவனென்ற ஜாதி வர்ணா சிரம மதபேதமில்லாமல் எல்லோரும் ஸமமாய், மோக்ஷ ஸாம்ராஜ்யமென்ற ஆலயத்தின் கதவு களைத் திறந்து விட்டாரென்பதே, அவர் பிராஹ் மணர்களுக்குச் செய்த பரம அபகாரம். அதை அவர்கள் ஒரு நாளும் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள்.

பௌத்தமதம் வேத விரோதமான தென்றும் வைதிகமல்ல வென்றும் நாஸ்திகமென்றும் வர்ணாச்ரமத்தைக் கெடுக்கிறதென்றும் பொதுவான அபிப்பிராயம். இது சரியல்ல. வேதத்தில் 'ஸத்யத்தைச் சொல், தர்மத்தைச் செய்' முதலிய உபதேசங்களையும் ஸ்மிருதிகளாலும் புராணங்களாலும் ஸ்பஷ்டமாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஆசாரங்களையுமே புத்த பகவான் இன்னும் தெளிவாயும் விஸ்தாரமாயும் வற்புறுத்துகிறார். வேத உபதேசங்களை அனுஷ்டிக்கச் சொல்லுகிறார். வேதத்தையே தெய்வமாகக் கொண்டாடச் சொல்லவில்லை. ஸகல நற்குணங்களும் பொருந்தினவனை பிராம்மணனென்கிறார். கேவலம் பிறப்பால் அந்தப் பதவியைக் கொண்டாடுகிறவனை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. தன்னைத் தானே ரக்ஷித்துக்கொள்ளக்கூடும். தன்னைத் தானே கெடுத்துக் கொள்ளக்கூடும். நாம் செய்வதை பிறர் செய்ய முடியாது. அதனால் நமக்குப் பயன் கிடைக்காதென்ற அவருடைய உபதேசத்திற்கு "நமக்கு நாமே பந்து; நமக்கு நாமே சத்ரு" வென்ற கீதாவாக்யமே ப்ரமாணம். கேவலம் கர்ம காண்டத்தையே மோக்ஷ மார்க்க

7582 (7811)

மென்று வாதிப்பவர்களைப் பற்றி கீதை இரண்டாவது அத்யாயத்தில் பகவான் கடுமையாய்க் கண்டிக்கவில்லையா?

கர்ம வாஸனைகளுடன் அந்தந்த ஜன்மங்களிலிருந்து வேறொரு ஜன்மத்தில் தேஹத்தை எடுக்கும் ஜீவன் நித்யனல்ல. கர்மானுபவமும் அதினால் உண்டாகும் ஞானமும் அக்ஞானமும் ஒவ்வொரு நிமிஷமும் மாறுகின்றது. நாம் இந்த நிமிஷத்தில் இருந்ததைக் காட்டிலும் அடுத்த நிமிஷத்தில் ஏற்றத்தையோ தாழ்வையோ அடைகிறோம். ஸ்தூல முதலிய தேஹங்களும் மனஸ் முதலிய கருவிகளும் ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இந்த ஜீவன் அநித்யன். மாறுதலில்லாத ஜீவனென்பது இல்லையென்று, அவர் ஸ்கந்தங்களையும் வாஸனைகளையும் சேர்த்துள்ள ஜீவனென்ற ஒரு வஸ்துவை மறுத்தாரே யொழிய, இவ்வளவு ஜீவன்களும் ஸூத்ரத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் மணிகளைப்போல் தங்களுடைய ஜன்ம அனுபவஸாரத்திற்கு நிதியான ஆத்மாவை மறுக்கவில்லை. நான், எனதென்ற பாவனையை உடைய ஜீவனை மறுத்தாரே யொழிய, நித்யனாயும் சுத்தனாயுமிருக்கும் ஆத்மாவை மறுத்ததாய்க் காணோம்.

ஈசுவரனால் நமக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லை. நாமே கஷ்டப்பட்டு முக்தியை யடையவேண்டுமென்று அவர் சொன்னாரே யொழிய, ஈசுவரன் இல்லவேயில்லை யென்று ஒரிடத்திலும் சொல்லவில்லை.

ஆகையால் லோகத்தில் அதுவரையிலும் பகவானால் அந்தந்தக் காலத்திற்கும் தேசத்திற்கும் ஜனங்களின் சக்திக்கும் தகுந்தபடி மஹாரிஷிகளை அனுப்பியும் தான் அவர்கள் மூலமாய் அவதரித்தும் பல உபதேசங்களைச் செய்து மதங்களை ஸ்தாபித்திருக்கிறார். எல்லாம் ஒரே தத்வத்தையே போதிக்கின்றன. வெளிப்படையாய் மாத்ரம் பேதங்கள் தோன்றும். முன் சென்ற மதத்திலுள்ள ஆபாஸங்களை மாத்ரம் பின் வந்தமதம் கண்டிக்குமேயல்லாது கேவலம் புதிதாய்லோகத்தில் ஒரு மதமும் ஒரு காலத்திலும் இல்லை.

அப்படியே தன் காலத்திலிருந்த ஹிந்து மதத்தின் ஊழல்களையும் க்ரூரச் செயல்களையும் அக்ரமங்களையும் தாக்ஷண்ய மில்லாமல் கண்டித்தாரே யொழியபுத்தபகவான் புதிதாய் ஒருமதத்தை ஏற்படுத்தி விடவில்லை.

B. C. 7 வது நூற்றாண்டுமுதல் A. D 11-வது நூற்றாண்டு வரையில் பௌத்தமதம் இந்தி

யாவில் செழித் தோங்கிற்று. மஹம்மதியர்களால் அழிக்கப்பட்டதே யொழிய மதபூர்வாசாரியர்கள் அதைத் நெறிக்கவில்லை. தற்காலத்தில் பௌத்தமதம் இந்தியா, சிலோன் (சிங்களம், அல்லது லங்கை, பர்மா, சியாம், சீனா, கொரியா, ஜப்பான், மங்கோலியா, மத்திய ஆசியா, கொச்சின் சைனா, பர்மோஸா, ஜாவா, நேபாளம், திபெத், அமெரிக்கா, இங்கிலாந்து, முதலிய தேசங்களில் பரவியிருப்பதும், லோகத்தில் தற்காலத்திலுள்ள 1500,000,000 ஜனங்களில் 500,000,000 புத்த மதத்தைச் சேர்ந்தவர்களென்பதும், லோகத்திலுள்ள இதர மதங்கள் வழங்கும் தேசங்களில், சண்டையும் சச்சரவும் யுத்தங்களும் நடந்திருக்கப் பௌத்தமத ப்ரசார விஷயத்தில் இதுவரையில் ஒரு ஜீவனும் நாசமடைந்ததில்லை, ஒரு துளி ரக்தமும் சிந்தவில்லை யென்பதுமே. புத்த பகவானால் லோகத்திற்கு அனுக்ரஹிக்கப்பட்ட இந்த மதம் ஸர்வோத்தமமென்றும் பரமார்த்த மென்றும் பிரத்யக்ஷமான மோக்ஷஸாதன மென்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்குப் போதுமான காரணங்களாகும்.

## பௌத்தமத கிரந்தங்கள்.

உத்தர பௌத்த மதம் திபேத் சீனா ஜப்பான் மத்ய ஆசிய மங்கோலியா முதலிய தேசங்களில் வழங்குகிறது, ஸம்ஸ்கிருத பாஷை.

(1). லலித விஸ்தாரம் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. புத்தர் உபதேசஞ் செய்ய ஆரம்பித்ததுடன் முடிகிறது. வசனமும் சுலோகமும் கலந்துள்ளது.

(2). மஹாபி நிஷ்கிரமண ஸூத்ரம்.

(3), ஸத்தர்ம புண்டரீகம்.

தக்ஷிணபௌத்தமதம். (பாலி பாஷை)

(4). வினய பிடகம்—இதில் ஸூத்ர விபங்கமும் (பிராதி மோக்ஷம்) கண்டங்களும் பரிவாரபாடமும் அடங்கியிருக்கின்றன.

(5). ஸூத்ர பிடகம்—இதில் தீர்க்க நிகாயம் மத்யம நிகாயம் ஸம்யுக்த நிகாயம் அங்குத்தர நிகாயம் க்ஷுத்ர நிகாயம் என்றவை அடங்கியிருக்கின்றன. இவைகளில் ஐந்தாவதில் க்ஷுத்ர கபாடம் (விதி சுலோகங்கள்) தர்மபதம் (நீதி வாக்கியங்கள்) உதான வர்கம் (52 ஆனந்த களிப்புகள்.) இத் யுக்தம் (110 புத்தோபதேசங்கள்) ஸூத்ர நிபாதம் (70 சிறு காவியங்கள்), விமான

வஸ்து (தேவ லோகங்களைப் பற்றினது) பிரேத வஸ்து (பித்ரு லோகங்களைப் பற்றினது) ஸ்தவிரீகதா (பிக்ஷுக்களாலும் பிக்ஷுணிகளாலும் செய்யப்பட்ட காவியங்கள்) ஜாதககதா (550 புத்த ஜன்ம கதைகள்) நித்தேச (ஸுத்த நிபாதத்திற்குச் சாரிபுத்ரர் செய்த வியாக்யானம்) பிரதி ஸம்விதா (புத்த மஹான்களின் யோக சக்திகளைப் பற்றினது) அபதான (மேற் சொன்னவர் களைப்பற்றின கதைகள்) புத்த வம்ச (25 புத்தர்களுடைய சரித்திரங்கள்) சர்யா படலம் (சில ஜாதக கதைகளின் காவ்ய ரூபம்).

(6). அபிதர்ம பிடகம்—இதில் தர்ம ஸங்காணி விபங்கம், கதா வஸ்து, புத்கலபிரக்ஞப்தி, தாது கதா, யமகம், பிரஸ்தான மென்றவை அடங்கியிருக்கின்றன.

THE SWADESAMITRAN BRANCH PRESS, MADRAS.

# புதிய பிரசுரங்கள்.

## மத ஸ்தாபகர்களின் திவ்ய சரித்திரங்கள்.

| சுத்தப்பதிப்பு | ரூ. | அ. |
|---|---|---|
| 1. ஸ்ரீ சங்கராசார்யர் | 0 | 5 |
| 2. ஸ்ரீ ராமாநுஜாசார்யா | 0 | 5 |
| 3. ஸ்ரீ மத்வாசார்யர் | 0 | 5 |
| 4. ஸ்ரீ கௌதம புத்தர் | 0 | 5 |

மானேஜர்,

"சுதேசமித்திரன்" ஆபீஸ்

சென்னை.